THRU the BIBLE

இரண்டாவது வாய்ப்புகள்

தேசங்களின் வீழ்ச்சி

பகுதி 2 ஆதியாகமம் 4-11:9



சந்தியுங்கள் பகிருங்கள் வளருங்கள்

ஒன்றாகக் கூடுங்கள், படித்ததைப் பகிர்ந்துகொள்ளுங்கள்,
ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டுங்கள்



வாரம் ஒருமுறை

கூடிவரும்போது செய்ய வேண்டியவை



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு?



ஜெபத்துடன் தொடங்குங்கள்: நீங்கள் ஒவ்வொரு பாடத்தையும் படிக்கத் தொடங்குவதற்கு முன்னும், “கர்த்தாவே, இதைப் படிப்பதின் வாயிலாக, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அறிவிலும் வளர உதவுங்கள்” என்று ஜெபியுங்கள்.



கொடுக்கப்பட்ட வேதபகுதியை வாசியுங்கள்: தேவனுடைய வார்த்தையின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்காக உங்கள் கண்களைத் திறக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.



“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்: நீங்கள் படித்த பகுதியின் பொருள், பின்னணி, மற்றும் தனிப்பட்ட நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து சிந்திப்பதற்காக வழங்கப்பட்ட வேதவாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் வழிகாட்டியைப் படியுங்கள்.



ஒவ்வொரு பாடத்தைப் படித்த பிறகும் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்: “வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைப் பற்றி சிந்தியுங்கள். ஒவ்வொரு போதனையைக் கற்றுக்கொண்ட பிறகும் தனிப்பட்ட சிந்தனைக் கேள்விகள் மற்றும் நடைமுறைக் கேள்விகளைப் பற்றி உங்கள் குழுவினருடன் கலந்து ஆலோசியுங்கள்.



டாக்டர் வெர்னோன் மெக்கியின் போதனைகளைக் கேளுங்கள்: டாக்டர் வெர்னோன் மெக்கியின் அனைத்துப் போதனைகளையும் படிக்க விரும்பினால் TTB.org என்று இணையதளத்துக்குச் சென்றோ அல்லது கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்தோ அல்லது யூடியூப்-ல் சென்றோ கேட்டும் வாசித்தும் கற்றுக்கொள்ளலாம்.



பரிந்துரைக்கப்படுகிற இடைநிறுத்தம் மற்றும் மறுதொடக்க ஐகானைப் பயன் படுத்தவும். இது அதனுடைய உள்ளடக்கத்தை கருத்துடனும் அதேவேளையில் உங்கள் சொந்த விருப்பத்திற்கு ஏற்றாற்போல் தொடர்ந்து படிக்கவும் வழிகாட்டும்.

உங்களுடைய சிந்தனைக்கு

வேத வாக்கியங்களுடன் உறவாடுதல் என்னும் இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு? — பக்கம் 4

பாவத்தின் விளைவுகள்
(ஆதியாகமம் 4:1 - 26) — பக்கம் 7

தேவனோடு நடத்தல்
(ஆதியாகமம் 5:1 - 6:7) — பக்கம் 27

நோவாவின் பேழை
(ஆதியாகமம் 6:8 - 7:20) — பக்கம் 49

ஜலப்பிரளயம்
(ஆதியாகமம் 7:20 - 8:22) — பக்கம் 73

புதிய தொடக்கம்
(ஆதியாகமம் 9) — பக்கம் 99

தேசங்கள்
ஆதியாகமம் 10 - 11:9 — பக்கம் 121


பாவத்தின் விளைவுகள்
ஆதியாகமம் 4:1-26

பாவத்தின் விளைவுகள்

அன்பான பரலோகப் பிதாவே,

“கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்” என்று கேட்ட சிறுவன் சாமுவேலைப் போலவே, நாங்களும் கேட்கிறோம் (1 சாமுவேல் 3:9). உமது வார்த்தையைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படியும்படி எங்களுக்குக் கற்றுத்தாரும். நாங்கள் விசுவாசத்தில் வளரவும், உம்மில் அதிகமதிகமாய் நம்பிக்கை கொள்ளவும் எங்களுக்கு உதவி செய்யும். ஊம்மை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் மிகுந்த வாஞ்சையுடன் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். கர்த்தாவே, நாங்கள் உம்முடையவர்கள், நீர் எங்களோடு பேசும், நாங்கள் கேட்பதற்கு ஆயத்தமாயிருக்கிறோம்.

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம், ஆமென்.

விசுவாசம் vs கிரியைகள்

ஆதியாகமம் 4:1-5

“உலகத்திற்கு வரவிருக்கிற மீட்பரைச் சுட்டிக்காட்டும் அந்த சிறிய இரத்த பலியை கொண்டு தேவனிடம் வாருங்கள். இந்த அடிப்படையிலேயே தேவனிடம் வாருங்கள்; மாறாக, உங்கள் சொந்தக் கைகளின் கிரியைகளால் உண்டாக்கப்பட்டவைகளைக் கொண்டு வராதீர்கள்.”

– டாக்டர் வெர்னோன் மெக்கீ

இன்றியமையா உண்மைகள்

ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் **பாவத்திற்கான மூலகாரணத்தைக்** குறித்துப் படிக்கிறோம். ஆதியாகமம் 4ம் அதிகாரத்தில் அந்தப் **பாவத்தினால் வந்த விளைவைப்** படிக்கிறோம்.

காயீனும் ஆபேலும் ஒரே குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். ஆனால் **இருவரும் வெவ்வேறு கண்ணோட்டத்துடன்** தேவனிடத்தில் வந்தார்கள். காயீன் **தனது உழைப்பின் பலனால்** (கைகளின் கிரியைகளால்) விளைந்தவற்றுடன் தேவனிடத்தில் வந்தான். ஆனால் ஆபேலோ **தேவன் எதிர்பார்க்கிறதைப்** பலியாகச் (காணிக்கையாகச்) செலுத்தினான்.

ஆபேல் **விசுவாசத்துடன் இரத்த பலியைக்** கொண்டுவந்தான். இது பாவங்களிலிருந்து நம்மை மீட்கிற **தேவஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகிறது.** மெய்யான ஆராதனை என்பது நாம் விரும்புகிறதை தேவனுக்குச் செலுத்துவதன்று, மாறாக, தேவன் கேட்பதை அவருக்குச் செலுத்துவது ஆகும்.

ஆவிக்குரிய சத்தியங்கள்



காயீனுடைய காணிக்கை: மனிதனின் நிபந்தனைகளின் பேரில் தேவனை அடைய **மனிதனுடைய சுயமுயற்சி** ஆகும்.



ஆபேலின் காணிக்கை: தேவனுடைய வார்த்தையின்பேரில் நம்பிக்கை வைத்து, அவர் வைக்கிற நிபந்தனைகளின் அடிப்படையில் அவரிடத்தில் வருவது (எபிரெயர் 11:4) ஆகும்.



விசுவாசமும் அதற்கு எதிரான கிரியைகளும்: மனிதனுடைய சுபாவம் தீமையானது அல்ல என்றும், அவன் தேவனிடத்தில் சரியான உறவில் இருக்கிறான் என்றும் நினைக்கிற **மனித கண்ணோட்டத்தை காயீன்** பிரதிபலிக்கிறான். தேவனிடத்தில் என்ன கொடுண்டுவர வேண்டும் என்பதை காயீன் தீர்மானித்தான். ஆனால் இதற்கு மாறாக, **ஆபேலோ தேவனுடைய வழியைப்** பிரதிபலித்துக் காட்டுகிறான்.



கிருபாதார பலி: பாவத்தின் தண்டனையை ஒரு பாவமற்ற பதிலாளைப் பலியிடுவதன் மூலம் நிவிர்த்தி செய்யலாம்.

ஆபேல் செலுத்திய பலி:
கிறிஸ்துவை முன்னறிவிக்கும் சித்திரம்



ஆபேல் இரத்தத்தினாலாகிய பலியை தேவனுக்குச் செலுத்தினான். அது விசுவாசத்துடன் செலுத்தப் பட்டதால் தேவன் அதை அங்கீகரித்தார். மேலும் தெய்வீக வழிமுறைமை களுக்குக் கீழ்ப்படிந்து அவன் இந்தப் பலியைச் செலுத்தினான்.

> *விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்.*
>
> (எபிரெயர் 11:4)

கிறிஸ்துவுடனான தொடர்பு: ஆபேலின் இந்தப் பலியானது, நமக்குப் பதிலாக ஓர் இரத்த பலியின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இறுதியில் கிறிஸ்துவின் பாவநிவாரண பலி மரணத்தில் இது நிறைவேறுகிறது.

இரட்சிப்பு என்பது காயீனின் பலி சுட்டிக்காட்டுவது போல, மனிதனால் உருவாக்கப்பட்ட மதத்திலிருந்து வருவதன்று, மாறாக ஒரு **பலி மரணத்தின் மூலமாக வருவதாகும்.**



சிந்தித்தல்

கேள்வி 1

நான் தேவனிடம் வருகிறபோது, நான் கொடுக்க விரும்புவதைக் கொடுக்கிறேனா, அல்லது அவர் என்னிடம் கேட்பதைக் கொடுக்கிறேனா?

கேள்வி 2

நான் விசுவாசத்துடன் தேவனை ஆராதிக்கிறேனா அல்லது என் நற்கிரியைகள் மற்றும் மதச் சடங்காச்சாரங்களின் அடிப்படையில் அவரை ஆராதிக்கிறேனா?

கேள்வி 3

என்னுடைய வாழ்க்கையில், காயீனைப் போன்று சுயமுயற்சிக் காரியங்கள் இருக்கிறதை நான் காண்கிறேனா? மேலும், கீழ்ப்படிதல் இல்லாமல் தேவனுடைய தயவைப் பெற முயலுகிறேனா?

செயல்படுத்துதல்

கேள்வி 4

இன்றைய நாட்களில், ஆராதனையின்போது உண்மையான ஒப்புவித்தல் என்பது எனக்கு எவ்விதமாகத் தோன்றுகிறது? அறிக்கையிடுதல், துதித்தல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் மூலம் ஆராதனையின்போது உண்மையான ஒப்புவித்தலைச் செயல்படுத்துவதற்கான ஏற்ற வழியைப் பற்றிச் சிந்தியுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

தேவனுடைய இரண்டாவது வாய்ப்பும் & காயீனின் இருதயமும்

ஆதியாகமம் 4:6-16



தேவனுடைய கட்டளைகள் – தேவன் காயீனிடம் எதைச் செய்யும்படிச் சொன்னார்?

“நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்” (ஆதியாகமம் 4:7).

“நீ மனந்திரும்பி, சரியானதைச் செய்” என்று தேவன் காயீனுக்கு மீண்டும் ஒரு **நல்ல வாய்ப்பை** அருளினார்.

காயீனின் செயல்பாடு

காயீன் ஆபேலைக் கொலைசெய்தான் (1 யோவான் 3:12; ஆதியாகமம் 4:8).

காயீன் தன் சகோதரனையோ அல்லது தன் தேவனையோ **மதிக்கவில்லை**. மாறாக, தன் செய்த காரியத்தை **மறைக்கவே முயற்சி செய்தான்**. **“என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?”** என்றான். எவ்வளவு பெரிய முரட்டாட்டமான பதில் இது!





தேவனுடைய நியாயத்தீர்ப்பு – ஒவ்வொரு பாவியும் தேவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியவனாயிருக்கிறான்.

தேவன் காயீனுக்கு அளித்த தண்டனை அவனால் **தாங்கிக்கொள்ள இயலாத அளவுக்குக் கடினமாயிருந்தது.** “நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்” என்று தேவன் கூறினார் (ஆதி. 4:12).

ஒவ்வொருவரும் தன் செயல்களுக்காக தேவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டும். ஒருவரும் இதற்கு **விதிவிலக்கு அல்ல**. “ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்” (ரோமர் 14:12).

தேவனுடைய இரக்கம் – மனந்திரும்புவதற்கான வாய்ப்பு

“காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் **அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார்**” (ஆதியாகமம் 4:15).

காயீன் **தேவனிடத்தில் மனந்திரும்பவும் இல்லை**, தன் **பாவங்களை அறிக்கையிடவும்** இல்லை. தேவன் காட்டிய இரக்கத்தை அவன் ஏற்றுக்கொள்ளவும் இல்லை.



சிந்தித்தல்

கேள்வி 1

நான் மனந்திரும்பி நடக்கும்படி, தேவனிடம் அறிக்கையிட்டு, வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டிய ஏதேனும் பாவங்கள் என் இதயத்தின் வாசலில் “பதுங்கிக் கொண்டிருக்கின்றனவா”?

கேள்வி 2

தேவ ஆவியின் உதவியினாலும், அவருடைய வார்த்தையின் உதவியினாலும் எவ்வாறு என்னுடைய பாவங்களை ஜெயங்கொள்ள முடியும்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

தேவன் நம்மைக் கவனித்துக்கொண்டிருக்கிறார், அவர் நம்மிடத்தில் கணக்குக் கேட்பார் என்னும் சிந்தனையானது, அவருடைய வார்த்தையைப் பின்பற்றவும், அவர் சொல்வதன்படி கீழ்ப்படிந்து வாழவும் உங்களை எவ்வாறு தூண்டுகிறது?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

மரபுவழிகள்

ஆதியாகமம் 4:17-26

காயீன் வம்சத்தார்

லாமேக்கு: பல பெண்களை மணமுடிக்கும் முறையை அறிமுகப்படுத்தியவன். இவன் ஆதாள், சில்லாள் என்னும் இரு பெண்களை மணமுடித்தான். இது சன்மார்க்க ஒழுக்கக் கேட்டுக்கு வழிவகுத்தது.

கொலை செய்ததைப் பெருமையாகக் கருதினான். காயீனைக் காட்டிலும் அதிகமான பழி என் மீது இருக்கிறது என்பதை பெருமையாகக் கூறினான் (ஆதியாகமும் 4:23-24).

இது ஆணவமும், பெருமையும் அதிகரிப்பதைக் காட்டுகிறது. தேவ பயமும் மரண பயமும் இல்லை.



ஆதாளின் மகன் யாபால்: யாபால் கூடாரங்களில் வாசம் பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான். இவனே நாடோடித் தொழிலை ஆரம்பித்து வைத்தவன்.

யாபாலின் சகோதரன் யூபால்: யூபால் கின்னரக்காரர் (யாழ்), நாகசுரக்காரர் (புல்லாங்குழல்) ஆகிய இசைக் கருவிகளைக் கண்டு பிடித்தான். இவன் மூல மாகவே பொழுதுபோக்கு, கலை, கலாச்சாரம் முதலியவை தோன்றின.

சேத்தின் வம்சத்தார்

சேத் மற்றும் ஏனோஸ்

"சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள ஆரம்பித்தார்கள்" (ஆதி. 4:26).

தேவனுடைய வாக்குறுதிகள்

தேவன் என்ன செய்யப்போகிறார்:

தாம் வழங்கிய வாக்குத்தத்தமாகிய, "ஸ்திரீயின் வித்தாகிய கிறிஸ்து" (ஆதி. 3:15) வெளிப்படுவதற்காக, **ஆபேலின் மரணத்துக்குப் பிறகு, சேத்தின் மூல மாக ஒரு புதிய தேவபக்தியுள்ள சந்ததிக்கு அந்த வாக்குறுதியை** வழங்கினார்.



சில்லாளின் மகன் தூபால் காயீன்

பித்தளை இரும்பு முதலிய ஆசாரியத் தொழில்களைச் செய்கிறவர்களுக்கு முன்னோடியாக விளங்கினான். கருவிகள், ஆயுதங்கள், உள் கட்டமைப்புகள் ஆகிய வற்றை முதன் முதலாக உருவாக்கிய கைவினைக் கலைஞராகவும், உலோகத் தொழிலாளியாகவும் இவன் விளங்கினான்.

தூபால் காயினுடைய சகோதரி நாமாள்

இவளுடைய பெயருக்கு, "மகிழ்ச்சி" என்று பொருள். வேதாகமத்தில் இவளைப் பற்றி மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இவள் காயீனின் வாரிசாக இருந்து அந்தக் காலத்திற்குரிய கலாச்சாரம் மற்றும் நாகரீக வளர்ச்சிக்கு அடிகோலியவளாக விளங்கினாள்.

கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை: நாகரீகம் வளர்ச்சி அடைந்தது, ஆனால் சன்மார்க்க ஒழுக்கப் பண்புகள் வீழ்ச்சியடைந்தன. பல பெண்களை மணமுடிக்கும் முறையைப் பற்றி வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தேவன் அதை ஒருபோதும் அனுமதிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காயீனின் வம்சத்தார் தொழிற்சாலைகளைத் தொடங்கினர், ஆனால் அவர்கள் தேவனைத் தேடுவதை விட்டு விட்டார்கள்.

கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை: "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித் தார்கள்" என்பதற்கு விழுந்துபோன பாவ உலகில் சேத்தின் சந்ததியினர் தேவனைத் தொழுதுகொள்வதையும், விசுவாசத்தையும் புதுப்பித்துக்கொண்டார்கள்.


மனிதன் பாவம் செய்து வீழ்ச்சியடைந்த போதிலும், தேவனுடைய மீட்பின் திட்டத்திற்கான சந்ததி தொடருகிறது.





"எழுபத்தேழு முறை பழிவாங்கப்படுவேன் என்று லாமேக்கு சொன்னான், ஆனால் நம் ஆண்டவர் சீமோன் பேதுருவிடம், உனக்கு விரோதமாய் குற்றஞ்செய்தவனை ஏழெழுபது தரமட்டும் மன்னிக்க வேண்டும் என்று கூறினார்."

தேவபக்தியுள்ள சந்ததி VS தேவபக்தியற்ற சந்ததி



காயீனும் ஆபேலும்

இருவித ஆவிக்குரிய சந்ததியை பிரதிநிதிப்படுத்துகின்றனர்.



காயீனும் ஆபேலும் வரலாறு முழுவதிலும் தொடர்ந்து வருகிற இரண்டுவிதமான ஆவிக்குரிய சந்ததியை அல்லது இரண்டுவிதமான மக்கள் கூட்டத்தைப் பிரதிபலிக்கின்றனர்

காயீனின் சந்ததி: மனித வழி, பெருமை, வன்முறை மற்றும் பொய்யான மதங்களுக்கு அடையாளம்

ஆபேலின் சந்ததி (இவனுக்குப் பின் சேத்): தேவனுடைய வழி, விசுவாசம், கீழ்ப் படிதல் ஆகியவற்றுக்கு அடையாளமாயிருக்கிறது. இந்தச் சந்ததியின் வழியில்தான் இயேசு கிறிஸ்து வருகிறார்.



> இரண்டு வம்ச வழிகள் அல்லது இரண்டு சந்ததிகள் இருக்கிறதை நாம் ஏற்கனவே கண்டோம். அவை ஒன்றுக் கொன்று எதிரானவை. நாம் பின்பற்றும் வழி சேத்தின் வம்ச வழியில் வருகிறது. இந்த தேவபக்தியுள்ள சந்ததியின் வழியாகத்தான் கிறிஸ்து இறுதியில் வருவார்.

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங் காலை நசுக்குவாய் என்றார்" என்று ஆதியாகமம் 3:15ல், தேவன் பேசியதில் இந்தக் கூற்று பிரதிபலிக்கிறது.

பாவத்தின்மீதும் சாத்தானின்மீதும் கிறிஸ்து பெற்ற வெற்றியில் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது.

தேவனால் கொடுக்கப்பட்ட சந்ததி என்ற முறையில் சேத் கிறிஸ்தவை சுட்டிக்காட்டுகிறான்.

ஏனெனில், ஆபேல் கொலை செய்யப்பட்டபோது, ஏவாள், "காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்கு சேத் என்று பேரிட்டாள்" (ஆதியாகமம் 4:25) என்று வாசிக்கிறோம்.

இது மேசியா பிறக்கப்போகிற குடிவழியைப் பாதுகாப்பதற்கான தெய்வீகத் திட்டமாகும்:

சேத்தின் பிறப்பின் மூலமாக தேவபக்தியுள்ள குடிவழி தொடர்ந்தது. இது **தேவபக்தியுள்ள வித்தாகிய (சந்ததியாகிய) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு** நேராக வழிநடத்திச் சென்றது.

சேத்தின் மூலமாக மனுஷர், **"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்"**. அதாவது தேவனைத் தொழுதுகொள்வதை புதுப்பித்துக்கொண்டதோடு, **தேவனையும் மனிதனையும் ஒப்புரவாக்கும் கிறிஸ்துவின் ஊழியத்தோடு** தங்களை இணைத்துக்கொண்டார்கள்.

சிந்தித்தல்

கேள்வி 1

என்னுடைய படைப்புத் திறன்களையும், நடைமுறைத் திறன்களையும், தனிப் பட்ட தொடர்புத் திறன்களையும், எனக்குப் புகழ் உண்டாக்குவதற்குப் பதிலாக தேவனை மகிமைப்படுத்தும் வகையில் எவ்வாறு பயன்படுத்துவது?

கேள்வி 2

தேவன் அங்கீகரிக்காத காரியங்களை என்னைச் சுற்றியிருக்கிற இந்தக் கலாச்சாரம் எவ்வாறு படிப்படியாக அங்கீகரித்துக் கொள்கிறது?

கேள்வி 3

“கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல்” என்பது என்னுடைய அனுதின வாழ்க்கையில் எவ்வாறு பொருள் நிறைந்ததாக உள்ளது?

செயல்படுத்துதல்

கேள்வி 4

ஆராதனை, ஜெபம், கீழ்ப்படிதல், ஒருவரை கிறிஸ்துவிடம் வழிநடத்துதல் ஆகியவற்றின் மூலம் தேவனுடைய பிள்ளையாக நான் எனது அடையாளத்தை வலுப்படுத்திக்கொள்வதற்கு இந்த வாரத்தில் நான் எடுக்க வேண்டிய முக்கியமான ஒரு முயற்சி என்ன?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான படிப்பினை

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய அறிவாற்றலை ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

டாக்டர் மெக்கீயின் மேற்கோள்:



“பல பெண்களை மணமுடிக்கும் முறையை தேவன் அங்கீகரித்ததாக வேதாகமத்தில் எந்த இடத்திலும் நீங்கள் ஒருபோதும் காண முடியாது. நீங்கள் வேதாகமத்தை துல்லியமாக ஆராய்ந்து படித்தால், அவர் பல பெண்களை மணமுடிக்கும் முறையைக் கண்டித்திருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள். தேவன் ஒரு காரியத்தை வேதாகமத்தில் பதிவு செய்திருக்கிறார் எனில், அதை அவர் வரலாற்றுப் பதிவாகவே கொடுத்திருக்கிறார். அதன் அடிப்படையிலேயே அது இங்கே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.”


தேவனோடு நடத்தல்
ஆதியாகமம் 5:1 - 6:7

தேவனோடு நடத்தல்

பரலோக பிதாவே,

நன்மை இன்னதென்று அறியவும், நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உமக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை எங்களுக்குக் காட்டியிருக்கிறீர் (மீகா 6.8). ஏனோக்கைப் போன்று நாங்களும் உம்மோடு சஞ்சரிக்க (நடக்க) உதவி செய்யும். சில தருணங்களில் மட்டுமின்றி, நீர் தருகிற எல்லா நாளிலும் உம்மோடு நடக்க உதவியருளும். எங்கள் இருதயமும், எங்கள் சிந்தைகளும் எங்கள் நடைகளும் உம்மோடு நெருக்கமாக இருக்கும்படி காத்துக்கொள்ளும்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

சேத்தின் மூலமாக ஆதாமின் சந்ததிகள்

ஆதியாகமம் 5:1-20

"ஆதியாகமம் 5-ம் அதிகாரத்தை, நீங்கள் ஒரு கல்லறைத் தோட்டத்தின் வழியாக நடப்பது போல கடந்து செல்கிறீர்கள்... ஆனால் அங்கே, மரிக்காத ஒரு மனிதன் திடீரென்று தோன்றுகிறான். அவன் தேவனோடு நடக்கிறான், தேவன் அவனை அழைத்துச் செல்கிறார். அவன்தான் ஏனோக்கு. அதுவே அவனுடைய விசுவாசம். அதுவே அவனுடைய நம்பிக்கை."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ

முக்கியமான சிந்தனைகள்

ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில், **பாவத்தின் விளைவால் வந்த சாபத்தைக்** கண்டோம். 5-ம் அதிகாரத்தில், **மரணத்திற்கு நேராக வழிநடத்துகிற பாவத்தின் பின்விளைவைக்** காண்கிறோம்.

ஆதாம் **தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டவன்.** அவனுடைய சந்ததி யினரோ **ஆதாமின் விழுந்துபோன சாயலில் பிறந்தார்கள்** (ஆதி. 5:3).

அவன் மரித்தான் என்று மீண்டும் மீண்டும் வருகிற சொற்றொடரானது, ரோமர் 6:23-ல் சொல்லப்பட்டுள்ளபடி **பாவத்தின் சம்பளம் மரணம்** என்பதை உறு திப்படுத்துகிறது. 1 கொரிந்தியர் 15:22 கூறுகிறபடி, "**ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்**".

எல்லாரும் மரணமடைந்தாலும், அதில் விதிவிலக்காக இருக்கிற ஏனோக்கைச் சந்திக்கும்வரை இந்த 5-ம் அதிகாரம் ஒரு **கல்லறைத் தோட்டப் பதிவேட்டைப்** போலவே வாசிக்கப்படுகிறது. **ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்ததால் மரணத் தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.**

மரணம் எல்லாரையும் ஆண்டுகொண்டாலும், தேவனுடன் சஞ்சரிப்பது (நடப்பது) ஜீவனுக்கு வழிவகுக்கிறது என்ற நம்பிக்கையை இது நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

தேவனுடைய பண்புகள்

சிருஷ்டிகர் - தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார் (ஆதி. 5:1).

உண்மையுள்ள நியாயாதிபதி - "இதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள்" என்று தேவன் தாம் முன்னரே கூறிய வார்த்தையை நிறைவேற்றினார். இது சரீர மரணத் தையும் ஆவிக்குரிய மரணத்தையும் கொண்டு வந்து மக்களைத் தேவனைவிட்டுப் பிரித்தது.

பொறுமையுள்ளவர் - தேவன் மனிதரை நீண்ட நாட்கள் வாழவிட்டிருந்தாலும் அவர் தம்முடைய தீர்ப்பை ஒத்திவைக்கவில்லை.

ஆவிக்குரிய சத்தியங்கள்

பாவ சுபாவம் - இது ஆதாமின் வழியாக அவனுடைய சந்ததியினர் அனைவருக்கும் கடத்தப்பட்டது.

பாவத்தின் சம்பளம் மரணம் - சேத்தின் வழிவந்த தேவபக்தியுள்ள **சந்ததியினரையும் மரணம் தழுவிக்கொண்டது.** "மரணமானது ஆதாம் முதல் மோசேவரைக்கும், ... பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது (ரோமர் 5:14).

இரண்டு வம்சவரலாறு - ஆதியாகமம் 5-ம் அதிகாரம் **ஆதாமின் வம்ச வரலாறு** என்று தொடங்குகிறது. ஆனால் புதிய ஏற்பாடு, "**இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு**" (மத். 1:1) என்று தொடங்குகிறது.

இதில் ஒரு சந்ததி மரணத்தில் முடிகிறது, மற்றொரு சந்ததியோ நித்திய ஜீவனில் முடிகிறது.





சிந்தித்தல்

கேள்வி 1

உங்கள் நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன என்பதை நீங்கள் அறிந்து கொள்வது, விசுவாசத்தினால் தேவனோடு நடக்க வேண்டும் என்ற தீவிரமான விருப்பத்தை எவ்வாறு தூண்டிவிடுகிறது?

கேள்வி 2

விசுவாசிகளின் கல்லறைத் தோட்டத்தின் வழியாக நடந்து செல்வதைக் கற்பனை செய்து பாருங்கள்! மரணத்திற்குப் பிறகு, உங்களது வாழ்க்கையை எதிர்கொள்ள இது எவ்விதமான ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

நீங்கள் இனிமேல் ஆதாமினுடைய கதையின் ஒரு பகுதியாக அல்ல. மாறாக, நீங்கள் கிறிஸ்துவின் வம்சாவளியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். இயேசுவில் பெற்றிருக்கிற உங்களுடைய புதிய அடையாளத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறீர்கள்? மேலும் அவருடைய நீதி, பரிசுத்தம் மற்றும் நித்திய நம்பிக்கையை எவ்வாறு பிரதிபலிக்கிறீர்கள்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

கதாபாத்திரங்களிலிருந்து படிப்பினை

ஏனோக்கு - பரலோகத்தை நோக்கிய ஒரு நீண்ட பயணம்

ஆதியாகமம் 5:21-14

ஏனோக்கு - இவனைப் பற்றி நாம் அறிந்திருப்பது என்ன?

ஏனோக்கு தன் மகன் மெத்தூசலா பிறந்த பிறகு, **முந்நூறு ஆண்டுகள் தேவனோடு சஞ்சரித்தான் (நடந்தான்).**

வேதாகமத்தில், மரணமே சந்திக்காத **இரண்டு நபர்களில் ஏனோக்கு ஒருவன்.**

தேவன் அவனைப் **பரலோகத்திற்கு நேரடியாக எடுத்துக்கொண்டார்.**

இந்த உலகத்தில் மரணம் எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் **ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்ததால் (நடந்ததால்) அவன் மரணத்திலிருந்து விதிவிலக்கானவனாகக்** காணப்படுகிறான்.



ஏனோக்கு என்ன செய்தான்?

ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தது (நடந்தது), அவருடனான ஐக்கியத்தில் அவன் மனதாரத் திட்டமிட்ட ஒன்றாகவும், தொடர்ச்சியானதாகவும் இருந்தது.

ஏனோக்கின் ஆவிக்குரிய சீர்திருத்தம் (மனமாற்றம்) அவனுக்கு **ஒரு மகன் பிறந்தவுடன் உண்டாகத் தொடங்கியது.** குடும்பங்களில் நிகழ்கிற சில முக்கியமான தருணங்கள், பெரும்பாலும் மக்களை தேவனிடம் திரும்பக் கொண்டு வருகின்றன என்பதை இது நினைவூட்டுகிறது.

ஏனோக்கு **கறைபடிந்த ஓர் உலகில் வாழ்ந்தாலும்,** தேவனுடன் அவன் கொண்டிருந்த **அந்நியோன்ய ஐக்கியம்** அவனை இந்த உலகத்திலிருந்து **பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை** வாழ உதவி செய்தது.

ஏனோக்கு தேவனோடு **சஞ்சரித்த (நடந்த) காரியம்,** அவன் வாழ்ந்த **கலாச்சாரத்திற்கு முற்றிலும் எதிரானது. மேலும் அது நித்தியமானது.**



> “ஏனோக்கு அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தபின் மெத்தூசலாவைப் பெற்றான். அதன் பிறகு அவன் தேவனோடு சஞ்சரிக்கத் (நடக்கத்) தொடங்கினான் என்று நாம் வாசிக்கிறோம். அவனுடைய வாழ்க்கையின் முதல் அறுபத்தைந்து ஆண்டுகள் எவ்விதமாக இருந்தன என்று எனக்குத் தெரியாது. அச்சமயத்தில் அவனும் மற்ற மக்கள் கூட்டத்தாரைப் போலவே இருந்திருப்பான் என்று நான் கருதுகிறேன். அவனைப் பொருத்தவரை இது மிகவும் கவனக்குறைவான காலம், இப்போது நோவாவின் நாட்களில் இருந்த சூழ்நிலையிலேயே அவனுடைய வாழ்க்கையும் நகர்ந்தது. ஆயினும், அந்தச் சிறுவன் மெத்தூசலா பிறந்தபோது, ஏனோக்கின் வாழ்க்கை நடை மாறியது.”

ஏனோக்கிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

ஏனோக்கின் ஐக்கியம்-“ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான்” என்பது இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி. 5:22, 24). இது தேவனுடனான ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

தேவனுடைய பிரதிபலன் அவனுக்கு அளிக்கப்பட்டது - “ஏனோக்கு தேவனுக்குப் பிரியமானவனென்று” சாட்சி பெற்றான் என்று எபிரெயர் 11:5 கூறுகிறது. விசுவாசம் எப்போதும் தேவனுடைய இருதயத்தை அசைக்கிறது.

சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு நிழல் - ஒரு மனிதன் மரிக்காமல் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது தேவன் தம்முடைய திருச்சபையை எடுத்துக் கொள்வார் என்பதற்கான ஒரு சித்திரமாயிருக்கிறது (1 தெச. 4:17)

உண்மையான விசுவாசம் வெறுமனே சடங்குகளை நிறைவேற்றுவது அல்ல, அது தேவனுடனான ஐக்கியம் என்பதை அவன் தேவனோடு நடந்த செயல் சுட்டிக் காட்டுகிறது.

சிந்தித்தல்

கேள்வி 1

ஏனோக்கு தன் அனுதின வாழ்க்கையில் எவ்வாறு வாழ்ந்திருப்பான் என்பதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கேள்வி 2

தேவனுடன் மனப்பூர்வமான நிலையில் ஐக்கியங்கொள்வது உங்களுக்கு எவ்வாறு இருக்கிறது?

கேள்வி 3

ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமில்லாமல், ஒவ்வொரு நாளும் தேவனுடன் ஐக்கியமாக நடப்பது உங்களுடைய வாழ்க்கையை எவ்வாறு மாற்றியிருக்கிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 4

உங்கள் தனிப்பட்ட கதையை எழுதுங்கள்: நீங்கள் எப்பொழுது "தேவனோடு நடக்கத்" தொடங்கினீர்கள்? இதுவரையிலான உங்கள் பயணத்தில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? இந்த வாரத்தில் நீங்கள் எவ்வாறு அவருடன் இன்னும் நெருக்கமாக நடக்க முடியும்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

மெத்தூசலா – பெருவெள்ளத்திற்கு முன் சீர்கெட்ட நிலை

ஆதியாகமம் 5:25-6:7

ஆவிக்குரிய சத்தியங்கள்

மெத்தூசலாவின் வாழ்க்கை

“மெத்தூசலா” என்ற பெயருக்கு, “**அவன் மரிக்கும்போது அது சம்பவிக்கும்**” என்று பொருள். அவன் மரித்தபின் ஜலப்பிரளயம் (பெருவெள்ளம்) வந்தது.

வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டதிலேயே அதிக நாட்கள் (969 ஆண்டுகள்) வாழ்ந்தவன் மெத்தூசலா ஆவான். இருந்தான். ஏன்? தேவன் **இரக்கமும் பொறுமையும் நிறைந்தவர்** என்பதை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக அவனை நீண்ட நாட்களாக மரிக்காதபடிக்குக் காத்துக்கொண்டார்.

ஜலப்பிரளயம் என்னும் நியாயத்தீர்ப்பை அனுப்புவதற்கு முன் **தேவன் 900 ஆண்டுகள் பொறுமையுடன் காத்திருந்தார்.**

மரித்தவர்களின் பட்டியல்கூட **தேவன் நீடிய பொறுமையுள்ளவர்** என்பதற்குச் சான்றாக இருக்கிறது.

“தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத் தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டு மென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்” (2 பேதுரு 3:9).

மெத்தூசலாவின் அடையாளம், நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்பதையும், இரக்கம் என்றென்றும் காண்பிக்கப்படப்போவதில்லை என்பதையும் மக்களுக்கு நினைவூட்டு கிறது.

> “மெத்தூசலா ஏன் மற்ற எந்த நபரைக் காட்டிலும் நீண்ட காலம் வாழ்ந்தார்? தேவன் பொறுமையும் இரக்கமும் கொண்டவர் என்பதை மனிதகுலம் அறியச் செய்வதற்காகவே ஆகும். அருமையான நண்பரே, உங்கள் வாழ் நாள் முழுவதும் தேவன் உங்களுக்காகவும் காத்துக் கொண்டிருக்கிறார்.”



ஆதியாகமம் என்பது குடும்பங்களை மையமாகக் கொண்ட **வம்ச வரலாறுகளை விவரிக்கும் புத்தகம்.**

“**தேவகுமாரர்**” என்பவர்கள் **ஆதாம் முதல் சேத் வரையிலான தேவபக்தியுள்ள வம்சாவளியில்** பிறந்தவர்கள். “**மனுஷகுமாரத்திகள்**” என்பவர்கள் **காயீனின் வம்சாவளியில் பிறந்தவர்கள்.** தேவகுமாரருக்கும் மனுஷகுமாரத்திகளுக்கும் ஏற்பட்ட அவர்களின் கலப்புத் திருமணம் பூமியில் **அக்கிரமம் பெருகுவதற்கு** வழிவகுத்தது.

தேவபக்தியுள்ள சந்ததியினரும், தேவபக்தியற்ற சந்ததியினரும் ஒன்றிணைந்த காரியம் பூமியில் அக்கிரமத்தை பெருமளவில் பரப்பியது.

இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததா யிருந்தது - இந்த அதிர்ச்சியடையச் செய்கிற வார்த்தைகள் **மனித இதயத்தின் மோசமான நிலையை** வெளிப்படுத்துகின்றன (ஆதி. 6:5).

முக்கியமான சிந்தனைகள்

மனிதனின் எண்ணங்கள், விருப்பங்கள் மற்றும் அவனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றங்கள் யாவும் அவன் **மீண்டுவர முடியாதபடிக்கு பொல்லாதவைகளாக** மாறிவிட்டன.

“**கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்**” என்ற வார்த்தைகள் மனிதர்படும் வேதனை யிலிருந்து அவர் **வெகு தொலைவில் இல்லை** என்பதைக் காண்பிக்கின்றன.

ஜலப்பிரளயம் வருவதற்கு முன்பு, **மக்கள் மனந்திரும்பும்படி தேவன் 120 கிருபையின் ஆண்டுகளை** அளித்தார்.

சிந்தித்தல்

கேள்வி 1

தேவன் பொறுமையாயிருந்ததுபோல நானும் பிறரிடத்தில் பொறுமையாயிருக்கிறேனா? அல்லது மக்களிடத்தில் உடனடியான மாற்றத்தை எதிர்பார்க்கிறேனா? அல்லது பொறுமையிழந்து அவர்களை விட்டுவிடுகிறேனா? தேவனைவிட்டுத் தூரமாயிருக்கிற, உங்களுக்கு நெருக்கமாயிருக்கிற ஒருவரைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவர்களை தேவனிடத்தில் மீண்டும் கொண்டுவருவதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?

கேள்வி 2

நான் உலகத்தோடு கலந்துவிடுகிறேனா? அல்லது இந்தக் கறைப்பட்ட தலைமுறையில் ஏனோக்கைப் போன்று தனித்து நிற்கிறேனா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்களுடைய வாழ்க்கையில் பொழுதுபோக்குகள், உறவுகள், சிந்தனைகள் போன்றவற்றில் எந்தப் பகுதியில் நீங்கள் உலகத்தோடு சமரசம் செய்துள்ளீர்கள் என்பதைக் கண்டறியுங்கள். அவற்றை தேவனுடைய பரிசுத்தத்துடன் பொருந்திப் போகத்தக்க வகையில் ஓர் உறுதியான முயற்சியை இந்த வாரத்தில் எடுங்கள்.

கேள்வி 4

சன்மார்க்க ஒழுக்கச் சீர்கேடும், உண்மையைச் சமரசம் செய்தலும் நிறைந்துள்ள இக்காலகட்டத்தில் என்னுடைய மனதையும் சிந்தையையும் கறைப்படுத்தாமல் காத்துக்கொள்வது எப்படி?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வருவது, மனிதரிடத்திலிருந்து வருவதன்று

ஆதியாகமம் 5:31-33; 6:3,7

ஆவிக்குரிய சத்தியங்கள்

மனித நன்மையின் மாயை

மனிதர்கள் இயல்பிலேயே நல்லவர்கள் என்றும், **சுய முன்னேற்றத்துக்கு அல்லது இரட்சிப்புக்குத் தகுதியானவர்கள்** என்ற கருத்தை உலகம் **ஊக்குவிக்கிறது**.

ஆயினும், வேதாகமம் இதிலிருந்து, **"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10)** என்னும் மாறுபட்ட கண்ணோட்டத்தை முன்வைக்கிறது.

மனித சுபாவம் **இயல்பிலேயே நல்லதன்று; அது முற்றிலும் தீமை நிறைந்தது**.



"கம்யூனிசமும் சோசலிசமும் மனிதனுடைய வாழ்க்கை மேம்படுத்த முயல்கின்றன. மனிதன் தன்னுடைய இரட்சிப்பிற்காக தானே உதவிசெய்ய முடியும் என்று ஆர்மீனியசம் போதிக்கிறது. நவீனத்துவம் மனிதன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று கூறுகிறது. இவை அனைத்தையும் வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இரட்சிப்பு என்பது தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் ஒரு சுயஉருவாக்கக் கருவி என்பதாகும். சில கள்ள வழிபாட்டுக் குழுக்கள் மனித இயல்பு முற்றிலும் நல்லதா யிருக்கிறது என்றும், அதில் பாவம் என்று சொல்லக்கூடிய எதுவும் இல்லை என்றும் சொல்கின்றன."

மனிதனோடு போராடிய தேவனுடைய ஆவி

நோவாவின் பிரசங்கத்தின் மூலமாக, **மனிதகுலம் மனந்திரும்பும்படிக்கு 120 ஆண்டுகளை** தேவன் கொடுத்தார். இது **தேவனுடைய ஆவியானவர்** கறைபட்ட உலகத்திடம் **தீவிரமாக மன்றாடிக்கொண்டிருந்த நீடிய பொறுமையுள்ள கிருபையின்** காலகட்டமாகும்.

மக்களோ **மனந்திரும்ப மறுத்துவிட்டனர்**. பேதுரு எழுதுவது போல, இதே ஆவியானவர் மூலமாக நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற்போன தினிமித்தம் காவலில் வைக்கப்பட்ட ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் (1 பேதுரு 3:18-20).

தேவன் மனிதனைப் படைத்ததற்காக வருத்தப்பட்டாலும்கூட, "நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல்...நிக்கிரகம்பண்ணுவேன்" (ஆதி. 6:7) என்றும் தம்முடைய **முழுமையான நியாயத்தீர்ப்பை நிறைவேற்று வதற்கு முன்பு, மனிதகுலம் மனந்திரும்புவதற்காக** அவர் நீண்ட காலம் காத்திருந்தார்.

இருப்பினும், தேவன் நோவாவின் குடும்பத்திற்கு கிருபை காட்டினார்.



சிந்தித்தல்

கேள்வி 1

சுய முயற்சிக்கும், தேவனிடம் முழுமையாகச் சரணடைவதற்குமான வேறுபாடு என்ன?

கேள்வி 2

மனித சுபாவம் அல்லது சுயமேம்பாடு பற்றி என்னை அறியாமலேயே நான் உள்வாங்கிக்கொண்ட அல்லது ஏற்றுக்கொண்ட தவறான காரியம் என்ன?

கேள்வி 3

என்னை நானே திருத்திக்கொள்ள முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேனா? அல்லது தேவனுடைய ஆவிக்கு முற்றிலும் ஒப்புக்கொடுப்பதை நம்புகிறேனா?

செயல்படுத்துதல்

கேள்வி 4

இந்த வாரம், உங்கள் வாழ்க்கையில் தேவனிடத்தில் சரணடைவதற்குப் பதிலாக சுயமுயற்சியைச் சார்ந்துகொண்ட காரியங்களை எழுதுங்கள். ஜெபத்துடன் தேவனைச் சார்ந்துகொள்வதன் வாயிலாக இம்முயற்சிகளை விலக்கிவிடவும். மேலும், இந்தப் பகுதியில் உங்களைக் கண்டித்து, வழிநடத்தி, புதுப்பிக்கும்படி ஆவியானவரின் ஒத்தாசையைக் கேட்கவும்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வீட்டில் செய்ய வேண்டிய காரியங்கள்

தேவனுடைய அறிவாற்றலை உங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துதல்

டாக்டர் மெக்கீயின் மேற்கோள்:



“மனிதன் முற்றிலும் தீயவனாகவும் முழுமையாகக் கெட்டவனாகவும் இருக்கிறான் என்று தேவன் கூறுகிறார். நம் எல்லாருடைய நிலையும் இவ்விதமாகத்தான் இருக்கிறது. “நீதிமான் ஒருவனாகிலும் இல்லை” (ரோமர் 3:10). இதுதான் உங்களைப் பற்றிய தேவனுடைய வார்த்தையின் மதிப்பீடு. நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டால், அது உங்களுடைய தற்கால வாழ்க்கையைப் பற்றிய, மற்றவர்களால் நமக்குக் கொடுக்கப்படுவதைக் காட்டிலும் உண்மையான கருத்தை உங்களுக்கு வழங்கும்.”


நோவாவின் பேழை
ஆதியாகமம் 6:8 - 7:20

நோவாவின் பேழை

பரலோகப் பிதாவே,

உம்முடைய கண்களில் நோவா கிருபையைப் பெற்றுக்கொண்டது போல, இன்று நாங்களும் அதே கிருபைக்காக ஏங்குகிறோம். மற்றவர்கள் உம்மை நம்பாத போதிலும், நோவா உம்மை நம்பி கீழ்ப்படிந்து போல நாங்களும் உம்மை நம்புவதற்கு உதவி செய்யும். இயேசு கிறிஸ்துவில் எங்களுக்குக் கிடைத்த இரட்சிப்புக்கு நன்றி சொல்கிறோம். எங்களை உம்மோடு நெருக்கமாக வைத்துக்கொள்ளும், உமது வாக்குறுதியில் உறுதியோடு இருக்க உதவும். உமது கிருபையினால் எங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளும்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

நியாயத்தீர்ப்புக்கு முன்னதாக கிருபை

ஆதியாகமம் 6:8-13

"ஒரு துளி தூறல் இல்லாதபோது, வறண்ட நிலத்தில் ஒரு பேழையைக் கட்டுவதற்கு விசுவாசம் தேவைப்பட்டது. நோவா தேவனை விசுவாசித்தார், அது அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றியது."

- டாக்டர் வெர்னோன் மெக்கீ

தேவன் ஏன் நோவாவைக் காப்பாற்றினார்?

நோவா தேவனோடு சஞ்சரித்தான் (நடந்தான்) - **அவன் தேவனுடனான உறவில் நிலைத்திருத்தலையும் கீழ்ப்படிதலையும் அனுதின வாழ்கை முறையாகக் கொண்டிருந்தான் (ஆதி. 6:9).**

நோவா நீதிமானாயிருந்தான் - தன்னைச் சுற்றி வாழ்ந்த கறைபடிந்த மக்களைப் போலல்லாமல், **நோவா தேவனுக்கு முன்பாக நீதிமானாக வாழ்ந்தான்.**

நோவா தேவனை விசுவாசித்தான் - "விசுவாசத்தினாலே நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினான்" (எபி. 11:7). **விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று... பேழையை உண்டுபண்ணினான்.**

நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்தான் - நோவா **"தேவன் தனக்குக் கட்டளையிட்டதை அப்படியே செய்து** தன்னுடைய முழுமையான கீழ்ப்படிதலைக் காட்டினான் (ஆதி. 6:22).

நோவா உண்மையுள்ளவனாயிருந்தான் - **தேவனை முற்றிலுமாக நிராகரித்த** ஒரு தலைமுறையில் அவன் அவருக்கு உண்மையுள்ளவனாக இருந்தான்.

நோவாவுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது - **நோவாவின் இரட்சிப்பு** அவனுடைய சொந்தத் தகுதியினால் கிடைத்ததன்று, அது **தேவனுடைய கிருபையினால் கிடைத்ததாகும்.**

நோவா விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் - ஆபிரகாமைப் போலவே (ரோமர் 4:3), **தேவன் நோவாவை நீதிமானாக்கினார்,** ஏனென்றால் அவன் தேவனை விசுவாசித்தான். **அவனுடைய சன்மார்க்க ஒழுக்கத்தினால் அவன் நீதிமானாக்கப்படவில்லை.**




ஏன் தேவன் ஜலப்பிரளயத்தை அனுப்பினார்? (வ. 11-13)

“பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது” (ஆதி 6:11).



தேவனுடைய வடிவமைப்பில் ஏற்பட்ட சீர்கேடு

“மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்” (ஆதி 6:12).




பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது.

மனித உயிரும் அதன் மேன்மையும் **மலிவாக மதிக்கப்பட்டன.**



வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை புறக்கணித்தார்கள்

தேவனுடைய **ஆவி மனிதனுடன் போராடியது,** ஆனால் மனிதன் அதை எதிர்த்தான்.



வாக்குத்தத்தம் புறக்கணிப்பு

மீட்பருக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாகத் துன்மார்க்கத்திற்குத் திரும்பினர்.



எச்சரிப்புகள் புறக்கணிக்கப்பட்டன

ஏனோக்கின் தீர்க்கதரிசன செய்தியும்,
மெத்தூசலாவின் பெயரின் அர்த்தம் தந்த செய்தியும்
நோவாவின் எச்சரிப்பின் பிரசங்கமும் நிராகரிக்கப்பட்டன.

“நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை” (ஆதி. 3:10) என்று சொல்லப்பட்டபடி மனுக்குலம் முழுவதும் தேவனை விட்டு விலகிச் சென்றது.



> “மனிதனுக்கு ஒரு மீட்பர் வாக்குறுதி அளிக்கப்பட்டார், பூமியில் ஒரு மீட்பர் வருவார் என்று அவனுக்குச் சொல்லப்பட்டிருந்தது. மனிதன் அதைத் தான் எதிர் பார்த்திருக்க வேண்டும்; ஆனால் அதற்குப் பதிலாக, அவன் தேவனை விட்டுத் தூரமாகப்போய்விட்டான்.”

நோவாவின் நாட்களுக்கும் நம்முடைய நாட்களுக்கும் ஓர் ஒப்பீடு

நோவாவின் நாட்கள்	நமது நாட்கள்
மக்கள் தொகை பெருக்கம்	மக்கள் பெருக்கம், நகர்ப்புற அடர்த்தி
சீர்கேடு அதிகரித்தல்	சன்மார்க்க சீர்கேடு, சட்டபூர்வ அநீதி
பூமி கொடுமையால் நிறைதல்	போர், குற்றம், கருக்கலைப்பு, வன்முறை
எச்சரிப்பின் பிரசங்கம் புறக்கணிக்கப்படுதல்	சுவிசேஷத்தை இகழுதல், மனந்திரும்புதலை நிராகரித்தல்
மிகக் குறைவான விசுவாசிகள்	உண்மையான திருச்சபைக்கு மத்தியில் விசுவாச துரோக குழுக்கள்
நியாயத்தீர்ப்பு தாமதமாகுதல்	தேவனுடைய இரக்கம் நீடிக்கப்படுத்தல்





நோவாவைப் போலவே, **விசுவாசமுள்ள மீந்திருக்கிறவர்கள் தேவனுடைய ஏற்பாட்டின் மூலம் காப்பாற்றப்படுவார்கள்.**

வழங்கப்பட்ட கிருபை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட **பிறகு** நியாயத்தீர்ப்பு வருகிறது.

சிந்தித்தல்

கேள்வி 1

நோவாவின் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் உங்களுக்கு எது தனித்துவமாக தோன்றுகிறது. இன்றைய உலகம் தேவனுக்கு கொடுக்கும் மறுமொழியிலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?

கேள்வி 2

தேவனுடைய தாமதமான தீர்ப்பு எந்த வழிகளில் அவருடைய இரக்கத்தையும், விசுவாசத்துடன் நாம் பதிலளிக்க வேண்டியதன் அவசியத்தையும் வெளிப் படுத்துகிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

என்னைச் சுற்றியுள்ள மக்கள் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் தேவனோடு நடக்காவிட்டாலும், இந்த வாரத்தில் அவ்விதமாக நடப்பதற்கு நான் எடுக்கக் கூடிய ஒரு முக்கியமான படி என்ன?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

பேழை - ஒரே வாசல், ஒரே வழி

ஆதியாகமம் 6:14-16

முக்கியமான சிந்தனைகள்


பேழை மிகப்பெரியது: 450 அடி நீளம், 75 அடி அகலம் மற்றும் 45 அடி உயரம். அது ஒரு கால்பந்து மைதானத்தின் அளவைக்காட்டிலும் ஒன்றரை மடங்கு நீளம் அதிகம்.

இது மூன்று தளங்களைக் கொண்டது: வசதியான இடம், நல்ல காற்றோட்டம் சரியான வரிசைக்கிரமம் ஆகியவை இருக்கும்படி திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது.

ஒரு கதவு, ஒரு ஜன்னல்: ஒரு ஜன்னல் பேழையின் மேல்தட்டில் இருந்தது; அதன் அருகே ஒரேயொரு கதவு இருந்தது.


கீழ் பூசி நீர் புகாதபடி காக்கப்பட்டது: நியாயத்தீர்ப்பிலிருந்து கிடைக்கும் **பாதுகாப்பையும் முத்திரையையும்** இது அடையாளப்படுத்துகிறது.

நோவாவின் பேழை ஒரு கார்ட்டூன் படகு வீடு அல்ல: அது கவனமாக பொறியியல் முறையில் வடிவமைக்கப்பட்ட இரட்சிப்பின் சரணாலயம்.



ஆவிக்குரிய சத்தியங்கள்

ஒரே ஒரு வாசல் - பேழையின் உள்ளே நுழைவதற்கு **ஒரே ஒரு வழிதான்** இருந்தது. "நானே வாசல். என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்" என்று இயேசு கிறிஸ்து கூறினார் (யோவான் 10:9). பேழையைப் போலவே **இரட்சிப்புக்கும்** பல வாசல்கள் அல்ல, **ஒரேயொரு வாசல்தான் உள்ளது.**





மேலே இருந்த ஜன்னல் - நோவா புயலைப் பார்க்கவில்லை, **மேலே பார்த்தார்.** வாழ்க்கையின் **புயல்களின் போது நமது கவனம் வெளிப்புறமாக அல்ல, பரலோகத்தை நோக்கி இருக்க** வேண்டும்.

மூன்று தளங்கள் - இந்த அமைப்பு **தேவனுடைய ஒழுங்கையும்,** அனைத்து வகையான உயிர்களையும் காப்பாற்றும் **அவருடைய ஏற்பாட்டையும் திறனையும்** பிரதிபலிக்கிறது.





"இரண்டாம் உலகப் போரின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட அமெரிக்காவின் போர்க்கப்பல்களில் ஒன்று நியூ மெக்ஸிகோ. இது 624 அடி நீளம், 106 1/4 அடி அகலம் மற்றும் சராசரியாக 29 1/2 அடி உயரம் கொண்டதாக கட்டப்பட்டது என்பதை நான் கவனித்திருக்கிறேன். ஒப்பீட்டளவில் இது நோவாவின் பேழை கட்டப்பட்டிருந்த அதே விகிதத்தைக் கொண்டிருந்தது. எனவே பேழை ஒரு அபத்தமான தோற்றமுடைய படகு போன்று உங்களுக்கு இருக்காது. மாறாக இன்றைய நாட்களில் கப்பல்களைக் கட்டும் விதத்துடன் ஒப்பிடக்கூடிய ஒன்றாகவே இருக்கும்."

சிந்தித்தல்

கேள்வி 1

நித்திய ஜீவனைப் பெறுவதற்கு இயேசு கிறிஸ்துவே ஒரே வழி என்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் நம்புகிறதை இங்கே பகிர்ந்துகொள்ளுங்கள்.

கேள்வி 2

புயல் போன்ற பிரச்சினைகளில் என்னுடைய பாதுகாப்பிற்காக தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கிற திட்டத்தைப் பற்றி பேழையின் அமைப்பும் அதிலுள்ள பராமரிப்பும் எவ்வகையில் வெளிப்படுத்துகின்றன?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்களுடைய பாதுகாப்புப் “பேழை” எவ்வாறு இருக்கும் என்பதை வரையவும் அல்லது பதிவுசெய்யவும். உங்களுடைய மீட்புக்கும் இளைப்பாறுதலுக்கும் கிறிஸ்துவின் மூலமாக தேவன் என்னென்ன காரியங்களை வழங்கியுள்ளார்? நீங்கள், விசுவாசிகளுக்கு ஒருபோதும் மூடப்படாத கதவாக இருந்ததற்காக அவருக்கு நன்றி செலுத்தும்படி இந்த வாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

உடன்படிக்கையும் வரப்போகிற அழிவும்

ஆதியாகமம் 6:17-22

முக்கியமான சிந்தனைகள்

தேவனுடைய தீர்ப்பு விரைவில் வருகிறது-நான் பூமியின்மேல் வரப்பண்ணுகிற ஜலப்பிரளயம் ஜீவசுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்கும்

தேவனுடைய உடன்படிக்கை தனிப்பட்டவர்களுக்கானது - "உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்" என்று தேவன் கூறினார் (வச.18).

பேழை மனிதருக்கும் மற்றும் விலங்குகளுக்கும் இரக்கத்தின் பெட்டகமாயிருக்கிறது.

நோவாவின் கீழ்ப்படிதல் பூரணமானது-"நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்" (வச.22).

ஆவிக்குரிய சத்தியங்கள்

தேவனுடைய நியாயத்தீர்ப்பு முழு உலகத்திற்கும் வந்தது.

தேவன் பாவத்தைப் பொருட்படுத்தாதவர் அல்ல. "வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்" (வச.17) என்று தேவன் அறிவித்தார். **அவருடைய கோபத்திற்கு முன் அவருடைய எச்சரிப்பு வருகிறது.**

தேவனுடைய உடன்படிக்கை கிருபையை அடிப்படையாகக் கொண்டது

வேதாகமத்தில் "உடன்படிக்கை" என்ற வார்த்தை இங்குதான் முதன்முதலாக இடம் பெற்றுள்ளது (உடன்படிக்கை என்பது தேவன் மனிதனுடன் செய்யும் நிரந்தரமான வாக்குறுதியைக் குறிக்கிறது).

இந்த உடன்படிக்கை நோவாவினால் **சம்பாதிக்கப்படவில்லை**, மாறாக, தேவனால் **கிருபையாகக் கொடுக்கப்பட்டது**.

இந்த உடன்படிக்கையின்கீழ் பேழை இரட்சிப்பின் அடையாளமாக இருக்கிறது.

படைப்பின் மீது தேவனுடைய இறையாண்மை

நோவா விலங்குகளைத் தேடிச் செல்லவில்லை, **அவைகளே அவரிடம் வந்தன** (வச.20)



சிந்தித்தல்

கேள்வி 1

ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னரே தேவன் நோவாவுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையை ஏன் முக்கியத்துவம் பெறுகிறது? இது தேவனுடைய கிருபை மற்றும் அவருடைய முன்னறிவைப் பற்றி என்ன வெளிப்படுத்துகிறது?

கேள்வி 2

மற்றவர்களுக்கு நியாயமற்றதாகத் தோன்றியபோதிலும் நோவா தேவனிடத்தில் முழுமையான கீழ்ப்படிதலைக் காண்பித்தான். அதுபோல தேவனுடைய அறிவுரைகளுக்கு நாம் கீழ்ப்படிவது எவ்வாறு சவால் நிறைந்ததாக உள்ளது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

இந்த வாரம் கிறிஸ்துவுடனான உங்கள் உடன்படிக்கையைப் பற்றிச் சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். உங்களுடைய எந்த பகுதியில் விசுவாசத்துடன் செயல்படுவதற்கு தேவன் உங்களை அழைக்கிறார் என்பதைக் குறித்து எழுதுங்கள். அதை உணரும்பட்சத்தில் நோவாவைப் போலவே, அதற்கு முழுமையாகவும் தாமதமின்றியும் கீழ்ப்படியுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

பேழைக்குள் வாருங்கள்

ஆதியாகமம் 7:1-20

"கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" (ஆதியாகமம் 7:1).

முக்கியமான சிந்தனைகள்

நோவா கிரியைகளினால் அல்ல, **விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்டான்** (எபி. 11:7)

பேழைக்குள் **"வாருங்கள்"** என்று தேவன் **கிருபையுடன் அழைத்தார்**. இந்த அழைப்பு மத்தேயு 11:28-ல் இயேசு கிறிஸ்துவின் அழைப்பை எதிரொலிக்கிறது.

சுத்தமான மிருங்கள் ஒரு ஜோடி அல்ல, **ஏழு ஜோடி மிருகங்கள்** பேழைக்குள் பிரவேசித்தன. பேழையிலிருந்து வெளியே வந்தபின், இவற்றில் சிலதை நோவா தேவனுக்குப் பலியாகச் செலுத்தினான்.

ஜலப்பிரளயம் வருவதற்கு முன், உள்ளே வருவதற்கு, **தேவன் இந்த உலகத்தாருக்கு கூடுதலாக 7 நாட்களைக் கொடுத்தார்.** ஆயினும் ஒருவரும் உள்ளே வரவில்லை.

மிருகங்கள் தேவனால் வழிநடத்தப்பட்டு **தாமாகவே பேழைக்குள் வந்தன.** அவை நோவாவின் முயற்சியால் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



ஆவிக்குரிய சத்தியங்கள்

இரட்சிப்புக்கான தேவனுடைய அழைப்பு

தேவன் "வாருங்கள்" என்று அழைத்தார். "உள்ளே போங்கள்" என்று சொல்லவில்லை. "**உள்ளே வாருங்கள்**" என்று கூறுவது, அவருடைய பிரசன்னம் உள்ளே இருக்கிறதைக் குறிக்கிறது.

நியாயத்தீர்ப்பு ஊற்றப்படுவதற்கு முன்னரே, நோவாவைப் போலவே நாமும் **தேவனுடைய பாதுகாப்பில் இருக்கும்படி அழைக்கப்படுகிறோம்.**

இளைப்பாறுதலையும் பாதுகாப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளும் படி **இயேசு கிறிஸ்து அதேவிதமான அழைப்பை நமக்கு வழங்குகிறார்.**

தேவனுடைய அழைப்பின் துல்லியத் தன்மை

சுத்தமான மற்றும் அசுத்தமான மிருகங்களுக்கிடையேயான வேறுபாடு ஏற்கனவே இருக்கிறது.

ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்கு **முன்னரே** பலியிடுவதற்கான **மிருகங்களை (வழிகளை) தேவன் வழங்கிவிட்டார்.**

தேவன் நோவாவுக்கு அருளிய கட்டளைகள் **தெளிவாகவும், அவருடைய நோக்கத்தை பிரதிபலிக்கிறதாகவும்** இருந்தன. அவருடைய திட்டங்களில் தோராயமானவை எதுவும் கிடையாது.

ஜலப்பிரளயத்துக்கு முன் தேவனுடைய பொறுமை

மனந்திரும்புவதற்கு **இறுதியாக 7 நாட்களை** வழங்கினார். இது தேவனுடைய **இரக்கத்தைக்** காட்டுகிறது.

ஆயினும் நோவாவின் குடும்பத்தாரைத் தவிர வேறு யாரும் உள்ளே வரவில்லை. பேழையின் **கதவு மூடப்படும் வரை அது மக்கள் வரும்படிக்கு திறந்தே** இருந்தது.



"இந்த ஏழு நாட்களுக்குள் உலகத்தார் பேழையின் கதவைத் தட்ட வாய்ப்பு இருந்தது. வெளிப்படையாகச் சொல்வோமாயின் அவர்கள் பேழைக்குள் வந்திருக்கலாம். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவனை நம்பி உள்ளே வருவதுதான். அவ்வாறு வந்திருந்தால் தேவன் அவர்களைக் காப்பாற்றியிருப்பார்."

பேழைக்கும் கிறிஸ்துவுக்குமான தொடர்பு

இயேசுவே நமது பேழை. நோவாவும் அவருடைய குடும்பத்தினரும் பேழையின் மூலம் **காப்பாற்றப்பட்டதைப்** போலவே, **வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து கிறிஸ்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான அடைக்கலமாயிருக்கிறார்.**

கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கைக்குள் வரும்படி தேவன் இன்றும் நம்மை அழைத்துக்கொண்டிருக்கிறார்.

"கர்த்தர் அவனை உள்ளேவிட்டுக் கதவை அடைத்தார்" (ஆதி. 7:16).

கிறிஸ்துவே வாசல், அவர் அதை மூடிவிட்டால் வேறு எந்த மனிதனாலும் அதைத் திறக்க முடியாது (வெளி. 3:7).



விசுவாசத்தினாலே நோவா பேழைக்குள் பிரவேசித்தான், தேவன் **அவனை உள்ளேவிட்டுக் கதவை அடைத்தார்.** இன்றைய நாட்களில் **கிறிஸ்துவே நமது பேழை. அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு அவரே அடைக்கலம்.**

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28).

இரட்சிப்பின் கதவு இன்றும் திறந்தே உள்ளது. ஆனால் பேழையைப் போலவே இதுவும் ஒரு நாள் மூடப்படும்.

"ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால், வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன" (ஆதியாகம் 7:19).

சிந்தித்தல்

கேள்வி 1

“பேழைக்குள் வாருங்கள்” என்ற அழைப்பின் தற்போதைய ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

கேள்வி 2

இன்னும் 7 நாட்களில் நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால் உங்களுடைய நடவடிக்கை எவ்வாறு வித்தியாசமாக மாறும்?

கேள்வி 3

தேவனுடைய கட்டளைகள் தெளிவாகவோ அல்லது வழக்கத்திற்கு மாறான தாகவோ இருந்தாலும் நான் அவருடைய குரலைக் கேட்கிறேனா?

செயல்படுத்துதல்

கேள்வி 4

ஒரு கணம் ஜெபித்து, “வாருங்கள்” என்ற தேவனுடைய தனிப்பட்ட அழைப்பிற்குப் பதிலளிக்கவும். கீழ்ப்படிதல், நம்பிக்கை, சரணடைதல் அல்லது விசுவாசம் என எவற்றில் கீழ்ப்படியும்படி அவர் உங்களை அழைக்கிறார் என்பதை புரிகிற விதத்தில் எழுதுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வீட்டில் செய்ய வேண்டிய காரியங்கள்

தேவனுடைய அறிவாற்றலை உங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துதல்

டாக்டர் மெக்கீயின்
மேற்கோள்:

“தேவன் நோவாவை நினைவுகூர்ந்தார். தேவன் ஒருபோதும் மறக்கமாட்டார். அவர் உங்களை நினைவிற்கொள்கிறார். நீங்கள் இரட்சிப்புக்காக அவரிடம் வந்தால், அவர் நினைவிற்கொள்ளாத ஒரே விஷயம் உங்கள் பாவம். ஆம், அவர் உங்கள் பாவங்களை இனிமேல் நினைவிற்கொள்வதில்லை. இது எவ்வளவு அழகான காரியம்!”


ஜலப்பிரளயம்
ஆதியாகமம் 7:20 - 8:22

ஜலப்பிரளயம்


அன்புள்ள பரலோகத் தந்தையே,

ஜலப்பிரளயத்தில் நோவாவை நீர் நினைவுகூர்ந்தது போல, எங்கள் வாழ்க்கையில் நேரிடுகிற ஒவ்வொரு புயலிலும் நீர் எங்களை நினைவில்கொள்வீர் என்று நாங்கள் நம்புகிறோம். எங்களுக்கு நேரிடுகிற காரியங்களின் முழுச் சித்திரத்தையும் நாங்கள் காண முடியாத போதிலும் உமது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, விசுவாசத்தில் நடக்க எங்களுக்கு உதவுங்கள். நீங்கள் எங்கள் அடைக்கலமாக இருப்பதற்காகவும், கிறிஸ்துவில் நாங்கள் பெற்றிருக்கிற புதிய வாழ்வுக் காகவும் நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம்.

இயேசுவின் நாமத்தில், ஆமென்.

ஜலப்பிரளயமும் ஒரே புகலிடமும்

ஆதியாகமம் 7:20-24



"பேழையிலிருந்து வெளியே வந்த பிறகு நோவா செய்த முதல் காரியம் கர்த்தருக்கு பலி செலுத்தி அவரைத் தொழுதுகொண்டதே ஆகும். அவன் முதலாவது தனக்காக வீட்டைக் கட்டவில்லை, மாறாக கர்த்தருக்காக ஒரு பலிபீடம் கட்டினான்."

டாக்டர் வெர்னோன் மெக்கீ

ஆவிக்குரிய சத்தியங்கள்


ஜலப்பிரளயம் உலகளாவியது

வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையானவை. ஜலப்பிரளயம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் ஏற்படவில்லை, மாறாக, **அது முழு பூமியையும் மூடுமளவுக்கு ஏற்பட்டது.**

"தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்" (ஆதி. 6:13).

> "அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டுமிருகங்களும், காட்டுமிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன. வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின."
>
> ஆதி. 7:21-22

ஆதியாகமம் 6:13 மற்றும் ஆதியாகமம் 7:21-23 ஆகியவற்றின் அடிப்படையில், பேழையில் இருந்தவர்களைத் தவிர, "**நாசியிலே ஜீவசுவாச முள்ளவைகள் எல்லாம்** மாண்டுபோயின" (வ.23).



பேழையில் இருந்தோர் மட்டுமே காக்கப்பட்டனர்

இந்த உலகளாவிய நியாயத்தீர்ப்பில் நோவாவும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே தப்பிப்பிழைத்தனர். “மனுஷர் முதல், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, ... நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன” (ஆதி. 7:23).

பேழையில் இருந்தோர் மட்டுமே காப்பாற்றப்பட்டது, தேவன் நியமித்த வழியில் செல்வோர் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்பதை வெளிப்படுத்துகிற அழகிய சித்திரமாயிருக்கிறது. அதுபோலவே இன்றைய நாட்களில், கிறிஸ்து மட்டுமே இரட்சிப்பின் ஒரே வழியாயிருக்கிறார். “அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (யோவான் 14:6) என்று அவர் கூறியிருக்கிறார்.

கடைசி நாட்களில் பரியாசம் செய்பவர்கள்

நோவா பரியாசத்தை எதிர்கொண்டது போலவே, நாமும் தேவநம்பிக்கையற்ற காலகட்டத்தில் வாழ்கிறோம்

“**அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?**” என்று கூறி பரியாசக்காரர் விசுவாசிகளைக் ஏளனம் செய்வார்கள் என்று 2 பேதுரு 3:3-4 வசனங்கள் முன்னரே கணித்துச் சொல்லியுள்ளன.

நியாயத்தீர்ப்பையும் தேவனுடைய தலையீட்டையும் மறுதலித்து, இப்பொழுது இருக்கிறபடியே இனிமேலும் நடைபெறும் என்று அழைக்கப்படுகிற பொதுவான ஒரு மனநிலை தோன்றியிருக்கிறது.

உலகளாவிய ஜலப்பிரளயம் என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். மேலும் இது தேவன் மீண்டும் உலகை நியாயந்தீர்ப்பார் என்பதற்கான சான்றாக உள்ளது (2 பேதுரு 3:5-7).



> “பரியாசக்காரர் எப்போதும் ‘அனைத்தும் இயல்பாகவே தொடர்கிறது’ என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் நாமும் அந்த நிலைப் பாட்டை பிடித்துக்கொண்டு, தேவனுடைய வசனத்தின் பூரணமான நம்பகத்தன்மையை ஏற்றுக்கொள்வது இயலாத காரியம்.”

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் நிழலாட்டமாக முன்னறிவிக்கப்பட்டது

பேழை மட்டுமே இரட்சிப்புக்கான தேவனின் ஒரே ஏற்பாடு. அவருடைய எச்சரிப்பைப் புறக்கணித்தவர்கள் அழிந்தனர். ஆனால் பேழைக்குள் சென்றவர்கள் மட்டும் காப்பாற்றப்பட்டனர். “கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் என்றார்” (ஆதி. 7:1).

அதைப் போலவே, இன்றைய காலகட்டத்தில், **இயேசு கிறிஸ்து மட்டுமே பாவிகளின் இரட்சிப்புக்கான தேவன் ஏற்படுத்திய ஒரே வழியாக இருக்கிறார்.** “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)

கிறிஸ்துவுக்குள் இருக்கிற **அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்**; அவருக்கு **வெளியே** உள்ள **அனைவரும் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்வார்கள்.**



சிந்தித்தல்

கேள்வி 1

நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் உண்மையாகவே ஏற்பட்டது என்று நம்புவது ஏன் முக்கியமானது? தேவனுடைய நீதியைப் பற்றி இந்த ஜலப்பிரளயம் நமக்கு என்ன செய்தியைச் சொல்கிறது?

கேள்வி 2

வேதாகமம் கூறும் தேவனுடைய உண்மைத் தன்மையைப் பற்றியும் அவருடைய நியாயத்தீர்ப்பு பற்றியும் பிறர் சவால் விடும்போதோ அல்லது அதை நிராகரிக்கும்போதோ நீங்கள் அதை எவ்வாறு எடுத்துக்கெள்வீர்கள்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

வேதாகமத்தை நம்பாதவர்களிடத்தில் தேவனுடைய நியாயத்தீப்பையும் இரட்சிப்பின் செய்தியையும் எவ்வாறு அன்புடன் பகிர்ந்துகொள்வீர்கள்? இத்தகைய ஒருவருக்கு இன்றைக்கு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதைக் குறித்துச் சிந்தித்துப்பாருங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

தேவன் நினைவுகூர்ந்து, சமாதானத்தைத் தருகிறார்

ஆதியாகமம் 8:1-5

முக்கியமான சிந்தனைகள்

தேவன் நினைத்தருளினார்

“தேவன் நோவாவை **நினைத்தருளினார்**” என்ற சொற்றொடர் மிகவும் ஆறுதலளிக்கிறது. தேவன் தம்முடைய மக்களை ஒருபோதும் **மறப்பதில்லை**.

“நினைத்தருளினார்” என்பது இதற்கு முன் தேவன் நோவாவை மறந்துவிட்டார் என்று அர்த்தமல்ல. அதாவது அவர் **நிலையான அன்புடன் செயல்பட்டார்**. நோவாவையும் அவரது குடும்பத்தினரையும் விடுவிப்பதாக அவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினார்.

தேவன் மீட்டெடுக்கிறார்

காற்று வீசியது, பூமி உலரத் தொடங்கியது. தேவன் தன்னுடைய **இயற்கைக்கு அப்பாற்பட்ட** நோக்கங்களை நிறைவேற்ற **இயற்கையான வழிகளைப்** பயன்படுத்து கிறார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

வெள்ளம் **திடீரென வடிந்துவிடவில்லை**, அது கொஞ்சம் கொஞ்சமாக வடிந்தது, அதற்கு சில நாட்கள் ஆகின. **தேவன் தம்முடைய நேரத்தில், துல்லியமாகவும் கவனமாகவும் செயல்படுகிறார்**.





தேவன் இளைப்பாறுதல் அளிக்கிறார்

“ஏழாம் மாதம் பதினேழாம் தேதியில் பேழை அராராத் மலைகளின்மேல் தங்கிற்று” (ஆதி. 8:4)

150 நாட்கள் தண்ணீர் பிரவாகித்த பிறகு, **பேழை அராராத் மலைகளின் மேல் தங்கிற்று.**



“தங்கிற்று” என்ற வார்த்தை ஓய்வுநாளைப் பிரதிபலிக்கிறது. நியாயத்தீர்ப்புக்குப் பிறகு **இளைப்பாறுதலும் சமாதானமும்** வருகிறது. இது தேவனை நம்புகிறவர்களுக்கு அவர் மறுசீரமைப்பையும் (பழைய நிலைக்குக் கொண்டுவருதல்) மற்றும் ஒரு புதிய தொடக்கத்தையும் தருகிறார் என்பதைக் குறிக்கிறது.

சிந்தித்தல்

கேள்வி 1

இயேசு கிறிஸ்து சிலுவையில் உங்களுடைய பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பைச் சுமந்தபோது உங்களை நினைவுகூர்ந்தார் என்று நினைப்பது, தேவனைப் பற்றிய உங்கள் புரிதலை எவ்வாறு ஆழமாக்குகிறது?

கேள்வி 2

தேவனுடைய வாக்குறுதிகள் ஒருபோதும் தோல்வியடையாது என்பதை அறிந்து, கிறிஸ்துவில் நீங்கள் தேவனுடன் சமாதானமாக வாழ்வதற்கு எவ்வளவு சுதந்திரம் பெற்றிருக்கிறீர்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

செயல்படுத்துதல்

கேள்வி 3

நீங்கள் அதிகாரத்தை விட்டுக்கொடுத்து, தேவனுடைய வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து, அவர் உங்களுடன் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளும்போது நீங்கள் சமாதானமாக இருக்கிறீர்களா?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

காகம் மற்றும் புறாவிடமிருந்து படிப்பினைகள்

ஆதியாகமம் 8:6-12

ஆவிக்குரிய சத்தியங்கள்

நோவா பேழையிலிருந்து வெளியே விட்ட காகமும் புறாவும் விசுவாசிகளுக்கு இருக்கிற இரண்டு சுபாவங்களைப் பற்றிய மிகவும் இன்றியமையான ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்துகின்றன.

காகம்

பழைய பாவ சுபாவம்

காகம் மீண்டும் பேழைக்குத் திரும்பி வரவில்லை. காகம் அசுத்தமான பறவைகள் பட்டியலில் உள்ளது (லேவி. 11:15). அது தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கும் அழுகிப்போன எச்சங்களை உண்டு கொண்டிருக்கலாம்.

"அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிற தில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை" (ரோமர் 7:18).


காகம் நமது **பழைய பாவ சுபாவத்துக்கு** ஒரு சித்திரமாயிருக்கிறது. இச்சுபாவம் சீர்கேடு நிறைந்த, சமாதானமற்ற காரியங்களால் ஈர்க்கப் படுகிறது. மேலும் இச்சுபாவத்தால் தேவனுடைய பிரசன்னத்தில் திருப்தியடைய முடியாது.

புறா

கிறிஸ்துவில் பெற்றிருக்கிற புதிய சுபாவம்

சுத்தமான பறவையான புறா, காகம் செய்ததற்கு மாறான வகையில், **ஜீவன், சமாதானம்** மற்றும் **மறுபடியும் புதுப்பிக்கப்படுதல்** ஆகியவற்றைக் குறிக்கிற **ஒலிவ இலையுடன்** திரும்பி வந்தது.

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டி யாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5:17).



புறா மீண்டும் மீண்டும் பேழைக்குத் திரும்பி வந்ததும், பூமி காய்ந்த வுடன் அது திரும்பி வராமல் சென்றதும் பரிசுத்த **ஆவியால் வழி நடத்தப்படுகிற** ஒரு விசு வாசியின் **சுபாவத்துக்கு** ஒப்பா யிருக்கிறது. காகத்தைப் போல் அல்லாமல், நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவில் மட்டுமே உண்மையான இளைப்பாறுதலைக் கண்டறிவதைப் போல நியாயத்தீர்ப்பின் தண்ணீர்கள் வடிந்தவுடன் புறா இளைப்பாறுதலுக்குத் திரும்பியது.

பேழையில் இரண்டு சுபாவங்களும் இணைந்து இருந்தன

பேழைக்குள் **சுத்தமான விலங்குகளும் அசுத்தமான விலங்குகளும்** சேர்ந்தே இருந்தன. இது ஒவ்வொரு விசுவாசியிடமும், பழைய மற்றும் புதிய சுபாவம் இரண்டும் உள்ளன என்பதை நினைவூட்டுகிறது.

“மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்” (யோவான் 3:6)

நாம் நல்லதொரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும், நம்மிலுள்ள பழைய சுபாவத்துக்கு எதிராகப் போராடவும், புதிய சுபாவத்தின்படி வாழவும் நமக்கு வல்லமையை அளித்திருக்கிறார்.

ஒரே வாழ்க்கையில் இரண்டு இயல்புகளும் உள்ளன என்பதற்கான பவுலின் விளக்கம்:

> “உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.”
>
> 1 யோவான் 2:15

பழைய சுபாவத்திற்கும் (மாம்சத்திற்கும்) புதிய சுபாவத்திற்கும் (ஆவிக்கும்) இடையே நிலவுகிற ஒரு **தொடர் போராட்டத்தின்** ஊடாகவே ஒரு விசுவாசி வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்று **பவுல் போதித்திருக்கிறார்**.

“**மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது;** நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாத படிக்கு, **இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது**” (கலா. 5:17).


இந்த உலகத்தின் காரியங்களால் ஈர்க்கப்பட்டு, சமாதானமற்ற நிலையில் இருக்கிற பழைய சுபாவத்தை காகம் பிரதிபலிக்கிறது. ஆனால் புறாவோ பரிசுத்தத்தையும், சமாதானத்தையும், தேவ பிரசன்னத்தையும் நாடுகிற **விசுவாசியின் புதிய இருதயத்தைக்** குறிக்கிறது.

உலகத்துடன் ஒத்து வாழ்வதைப் பலர் நியாயப்படுத்துகிறார்கள், ஆனால் **தேவனுடைய தரநிலையோ** கலாச்சாரத்துக்கும் மனித கருத்துக்கும் ஏற்ப **மாறுவதில்லை**.

நோவாவின் காலத்தில் இருந்ததைப் போலவே இன்றைய உலகமும் **நியாயத்தீர்ப்புக்கு காத்துக்கொண்டிருக்கிறது**.

பிரித்தெடுக்கப்படுதல் மற்றும் **அருட்பணி சிந்தை** ஆகியவற்றால் ஒரு விசுவாசி தனித்துவமான வாழ்க்கை வேண்டும்.

> “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்”
>
> மாற்கு 16:5



சிந்தித்தல்

கேள்வி 1

பேழையிலிருந்து வெளியே வந்த புறா பூமியில் இறங்குவதற்கு இடம் தேடி அலைந்தது போல, உங்கள் இதயம் சமாதானமற்றதாக உணரும்போது, நீங்கள் எங்கு இளைப்பாறுதலைக் கண்டடைவீர்கள்? கிறிஸ்துவில் தேடுவீர்களா அல்லது உலகத்தில் தேடுவீர்களா?

கேள்வி 2

அங்கீகாரம், வெற்றி போன்ற உலகப்பிரகாரமான, "பழைய சுபாவத்துக்குரிய" காரியங்களில் நீங்கள் சந்தோஷம் அனுபவிக்கிறீர்களா, அல்லது கிறிஸ்துவில் மட்டுமே இருக்கிற தேவ பிரசன்னத்தையும் சமாதானத்தையும் அனுபவிக்கும்படி ஏங்குகிறீர்களா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்களில் உள்ள "காகத்தின் சுபாவம்" எதனால் போஷிக்கப்படுகிறது? தேவனுடன் நடப்பதிலிருந்து உங்களை விலக்கி வைக்கும் ஏதேனும் பழக்க வழக்கங்கள், இச்சைகள், மனப்பான்மைகள் உங்களிடம் உள்ளனவா என்பதை அடையாளம் காணவும்?

கேள்வி 4

"பேழைக்குத் திரும்பி வருதல்" என்றால் என்ன? உங்களுடைய தனிப்பட்ட அடைக்கலமாகிய "பேழை" எப்படி இருக்கும் என்பதை வரையுங்கள் அல்லது அதைக் குறித்து எழுதுங்கள். இது கிறிஸ்துவிலுள்ள உண்மையான பாதுகாப்பும் சமாதானமும் எவ்வாறு இருக்கும் என்பதன் காட்சி நினைவூட்டலாக இருக்கும்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

புதிய ஆரம்பங்கள்: பலி, உடன்படிக்கை, ஆணை

ஆதியாகமம் 8:13-22


ஜலப்பிரளயத்தின் காலவரிசைக் கிரமம்

நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் பேழையில் இருந்த மொத்த நாட்கள்:

371

150
தண்ணீர் உயர்ந்த நாட்கள்

221
மழை முடிந்து தண்ணீர் வடிந்து, வெட்டாந்தரை தெரிந்த நாட்கள்



"பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று" (வ. 13).

இது ஜலப்பிரளயம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமின்றி, **முழு உலகத்துக்கும்** ஏற்பட்டது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

நோவாவின் முதல் செயல்: வேலையை ஆரம்பிப்பதற்கு முன் கர்த்தரைத் தொழுதுகொண்டது

"அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான்" (வ. 20).

நோவாவின் **முதல் தெரிந்தெடுப்பு** பலி செலுத்தி தேவனைத் தொழுதுகொண்டது.

நோவா **சுத்தமான மிருகங்களில்** சிலவற்றைத் தெரிந்துகொண்டு அவற்றைப் பலிசெலுத்தினான். இதற்காகவே பேழையில் சுத்தமான மிருகங்களில் ஏழு ஜோடிகளை பேழைக்குள் தேவன் அனுப்பினார்.

"நோவா செலுத்திய **தகனபலி கிறிஸ்துவுக்கு நிழலாயிருக்கிறது**" என்று டாக்டர் வெர்னோன் மெக்கீ சுட்டிக்காட்டுகிறார். நன்றி பலிகளும், முழுமையான ஒப்புவித்தலும் தேவனைப் பிரியப்படுத்தும் காரியங்களாகும்.

"சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார்" (வ. 21)



கிறிஸ்துவுக்குள்ள தொடர்பு

நோவா செலுத்திய நன்றி பலியானது மாபெரும் கிறிஸ்துவின் பலியை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

“சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை ...” என்றார் (வ. 21).

நோவாவின் பலி தேவனைப் பிரியப்படுத்தியது போல, சிலுவையில் கிறிஸ்துவின் பலி தேவனின் நீதியை முழுமையாகத் திருப்திப்படுத்தியது. மேலும் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே கிருபை மற்றும் சமாதானத்திற்கு வழிவகுத்தது.

“பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்” (எபி. 10:14).

மனிதகுலத்துடனான தேவனுடைய வாக்குத்தத்தமும் உடன்படிக்கையும்

ஜலப்பிரளயத்துக்குப் பின் தேவன் அனைத்து உயினங்களுக்கும் ஒரு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

முதல் வாக்குத்தத்தம்

“கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை” (ஆதி. 8:21).

இரண்டாவது வாக்குத்தத்தம்

“பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்” (ஆதி. 8:2).

மனிதனின் கலகம்

ஜலப்பிரளயத்துக்குப் பின்னரும் மனிதனின் இருதயத்தின் மாற்றமில்லா நிலையை தேவன் ஒப்புக்கொண்டார்.

“**மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது**; நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை” (ஆதி. 8:21).

மனிதனின் மூன்று நிலைகள்	என்ன நிகழ்ந்தது	வேதபகுதி
கலகம்	மனிதன் வெளிப்படையாகவே தேவனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான்.	ஆதியாகமம் 6:5
எச்சரிப்பை உதாசீனப்படுத்துதல்	நோவா 120 ஆண்டுகள் பிரசங்கம் பண்ணினான், ஆயினும் மக்கள் அவனுடைய எச்சரிப்பைப் புறக்கணித்தனர்.	2 பேதுரு 2:5
மனந்திரும்புதலை மறுத்தல்	ஒருவரும் தேவனிடத்தில் திரும்பி வரவில்லை.	ஆதியாகமம் 7:1

அவர்கள் எச்சரிக்கப்பட்டும் மனந்திரும்பாதது, மனிதகுலத்தின் **ஆவிக்குரிய முரட்டாட்டத்திற்கு** இது ஒரு தெளிவான நினைவூட்டலாகும்.

உலகம் **தண்ணீரால் சுத்திகரிக்கப்பட்டிருந்தாலும்கூட, பாவத்தின் வேர்** மனிதனின் இதயத்தில் இருந்ததால் அவனுடைய பாவசுபாவம் தொடர்ந்தது.

நியாயத்தீர்ப்பின் மூலமாக மட்டுமே இரட்சிப்பு ஒருபோதும் வராது. தேவனால் வாக்களிக்கப்பட்ட **மீட்பரின் வாயிலாக மட்டுமே** அது சாத்தியமாகும்.

சிந்தித்தல்

கேள்வி 1

தேவன் உங்களுக்கு ஒரு புதிய தொடக்கத்தைத் தரும்போது, நீங்கள் எவ்வாறு நடந்துகொள்வீர்கள்? நோவாவைப் போல, அடுத்த பணிக்குச் செல்வதற்கு முன் அவரைத் தொழுது கொள்வதன் மூலம் அவரைக் கனப்படுத்துவீர்களா?

செயல்படுத்துதல்

கேள்வி 2

உங்களுடைய நேரம், சிந்தனைகள், தெரிந்தெடுப்புகள் ஆகியவற்றை தேவனுக்கு ஒப்படைப்பதன் மூலம் உங்கள் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு அவருக்கு முன்பாக ஓர் ஆவிக்குரிய பலிபீடமாக மாற முடியும்? ஆராதனையின் தொடர்பில் நீங்கள் அவருக்கு முழுமையாக சரணடையக்கூடிய ஒரு பகுதியை அடையாளம் காணவும்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வீட்டில் செய்ய வேண்டிய காரியங்கள்

தேவனுடைய அறிவாற்றலை உங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துதல்

டாக்டர் மெக்கீயின் மேற்கோள்:



"காகம் தண்ணீரில் மிதந்த பிணங்களை சாப்பிட்டதால் அது மீண்டும் பேழைக்குத் திரும்பவில்லை. புறா சமாதானத்தையும் தூய்மையையும் தேடியதால் அது பேழைக்குத் திரும்பி வந்தது. நம்முடைய இதயங்களிலிருந்து எது வெளிப்படுகிறதோ அந்தச் சுபாவமே நம்மை ஆளுகை செய்கிறது என்பதை இது காட்டுகிறது."


புதிய தொடக்கம்
ஆதியாகமம் 9

புதிய தொடக்கம்

அன்பான பரலோகப் பிதாவே,

நீர் உடன்படிக்கையைக் காக்கும் தேவனாக இருப்பதற்காக நன்றி. எங்கள் வாழ்க்கையின் மூலம் உம்மை மகிமைப்படுத்தவும், உமது சாயலில் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரையும் மதிக்கவும், நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதத்திலும் பொறுப்பிலும் நடக்கவும் கற்றுத் தாரும். உமது வாக்குறுதிகளின்கீழ் பயபக்தியோடும், நன்றியுணர் வோடும், நம்பிக்கையோடும் நாங்கள் வாழ்வதற்கு உதவி செய்யும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

நியாயத்தீர்ப்புக்குப் பின்னான வாழ்க்கை

ஆதியாகமம் 9:1-5



"தேவன் நோவாவுடன் உடன்படிக்கை செய்தபோது,
அவர் அதை உங்களுடனும் என்னுடனும் செய்தார்;
ஏனென்றால் அவர் அதை எல்லா மனிதர்களுடனும் செய்தார்."

டாக்டர் வெர்னோன் மெக்கீ

ஆவிக்குரிய சத்தியங்கள்

தேவன் தமது படைப்பை மீண்டும் ஆசீர்வதிக்கிறார்

"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" (வ.1)

தேவன் ஆளுகையுடன் அல்ல, **புதுப்பித்தலுடன்** மீண்டும் தொடங்குகிறார். நியாயத்தீர்ப்புக்குப் பிறகும் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்று ஏங்கும் இருதயம் தேவனுக்கு இருக்கிறது.

தேவன் ஆதாம் மற்றும் ஏவாளிடம் கூறியது போலவே (ஆதியாகமம் 1:28), நோவாவின் குடும்பத்தாரிடமும் மீண்டும் புதிதாகத் தொடங்கச் சொல்கிறார்.

விலங்குகளுடனான மனிதனின் உறவு மாற்றமடைகிறது

"உங்களைப்பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும் ... உண்டாயிருக்கும்" (வச. 2).

மனுக்குலம் பாவத்தில் விழுந்த பிறகு விலங்குகள் மனிதனுக்கு அஞ்சவில்லை. ஜலப்பிரளயத்துக்குப் பிறகு தேவன் மனிதகுலத்திற்கும் விலங்குகளுக்கும் இடையில் ஒரு பாதுகாப்பு எல்லையை அமைத்தார். இதனால் பாவத்தால் பாதிக்கப்பட்ட உலகில் மரியாதை உணர்வும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டது.



தேவன் இறைச்சி சாப்பிட அனுமதியளிக்கிறார்

"நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக" (வச. 3).

மனிதனின் புதிய உணவுத்திட்டத்தில் தேவன் இறைச்சியைச் சேர்த்தார் (ஆதி.1:29). இது மனுக்குலம் சிருஷ்டிப்புடன் தொடர்புகொள்வதில் ஒரு மாற்றம் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

உயிர் (ஜீவன்) இரத்தத்தில் இருக்கிறது

"**மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்**" (வ. 4).

தேவன் **இரத்தத்தைப் பற்றிய ஒரு புனிதமான கண்ணோட்டத்தை** அறிமுகப்படுத்துகிறார்.

இரத்தம் என்பது ஜீவனைக் குறிக்கிறது, அது தேவனுக்குச் சொந்தமானது (லேவியராகமம் 17:11). புதிய சுதந்திரங்கள் அருளப்பட்டிருந்தாலும்கூட, பிற **உயிரினங்களை மதிப்பது தொடர்ந்து அவசியமானதாக** இருக்கிறது.

சிந்தித்தல்

கேள்வி 1

நியாயத்தீர்ப்புக்குப் பிறகும் மனித வாழ்க்கை செழிக்க வேண்டும் என்ற தேவனின் விருப்பத்தை, “நீங்கள் பலுகிப் பெருகுங்கள்” என்னும் கட்டளை எவ்வாறு வெளிப்படுத்துகிறது? இதைக் குறித்த உங்களுடைய கருத்து என்ன?

கேள்வி 2

தேவன் உங்களுக்கு வழங்கிய புதிய தொடக்கத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, உங்கள் வாழ்க்கையில் கடந்த காலத் தீர்ப்புகளின் சுமையை நீங்கள் இன்னும் சுமந்து கொண்டிருக்கும் பகுதிகள் ஏதேனும் உள்ளனவா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்களுடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளால் தேவனின் நற்குணத்தை யும் ஆளுகையையும் பிரதிபலித்து, அவரின் அதிகாரத்துக்குள் வாழ்வது என்றால் என்ன என்பதைப் பிறருக்குக் காட்டுவதற்கான ஒரு வழியை எழுதுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

தேவனுடைய உலகளாவிய உடன்படிக்கை

ஆதியாகமம் 9:6-10

ஆவிக்குரிய சத்தியங்கள்

தேவன் மனித ஆளுகையின் சன்மார்க்க அரசாங்கத்தை நிறுவுகிறார்

இந்தப் பகுதி **முன்னிருந்த மனசாட்சியின் காலகட்டத்திலிருந்து** மனித அரசாங்கத்தின் காலகட்டத்திற்கு **மாறுவதைக்** காட்டுகிறது.

மனுக்குலம் இப்போது **நீதியை நிலைநாட்டவும் உயிரைப் பாதுகாக்கவும்** பொறுப்பேற்க வேண்டிய காலகட்டத்திற்கு வந்துள்ளது. பாவத்தால் வீழ்ந்த உலகில் குடிமக்களின் அதிகாரம் அவசியமானதாக இருக்கிறது.

மனித உயிருக்கான நீதி

"மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (வச. 6) இதுவே மனித ஆளுகைக்கான அடித்தளமாகும்.

நீதியை நிலைநிறுத்த, குறிப்பாக உயிரைப் பாதுகாப்பதற்கான **பொறுப்பை தேவன் மனிதனுக்கு வழங்குகிறார். ஒவ்வொரு நபரும் தேவனின் சாயலைத் தரித்துக்கொண்டிருப்பதால் மனித உயிர் புனிதமானதாக இருக்கிறது.** மனித உயிரைக் கொல்வது என்பது அதற்குள் இருக்கும் தெய்வீக சாயலைத் தாக்குவதற்குச் சமமாகும்.

அனைத்துத் தலைமுறைகளுடனும் தேவனின் உடன்படிக்கை

"நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும் ... என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (வச.9).

இந்த உடன்படிக்கை நோவாவுக்கு மட்டுமல்ல, **முழு மனித இனத்திற்குமானது.** ஒவ்வொரு இனத்தையும், ஒவ்வொரு தலைமுறையையும் தேவன் இந்த **தெய்வீக உடன்படிக்கையில்** சேர்த்துள்ளார்.


இது பூமியில் மனித உயிரின் நிலைத்தன்மைக்காக **தேவனுடைய மனபூர்வமான ஒப்புவித்தலின்** அறிவிப்பாகும்.

அனைத்து உயிரினங்களுடனும் தேவனின் உடன்படிக்கை

"சகல ஜீவஜந்துக்கள்பரியந்தம்...என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (வச. 10).

தேவனின் பராமரிப்பு மனிதர்களுக்கு மட்டுமின்றி சகல ஜீவராசிகளுக்கும் நீண்டுள்ளது.

அவரது உடன்படிக்கை அனைத்து படைப்புகளையும் உள்ளடக்கியது, அதாவது இது புதியதாகப் படைக்கப்படவுள்ள எதிர்கால உலகத்தையும் உள்ளடக்கியது (ஏசாயா 11:6-9, ரோமர் 8:22)



சிந்தித்தல்

கேள்வி 1

நீங்கள் நீதிக்காக நிற்பதன் வாயிலாகவும், பலவீனமானவர்களைப் பாதுகாப்பதன் மூலமாகவும், ஒவ்வொரு நபரையும் கண்ணியத்துடன் நடத்துவதன் வாயிலாகவும் மனித வாழ்க்கையை நீங்கள் மதிக்கிறீர்களா?

கேள்வி 2

“ஒவ்வொரு மனுஷனும் தேவ சாயலைத் தரித்துக்கொண்டிருக்கிறான்” என்பது இந்த உலகில் வாழும் அனைவரும் சமமான மதிப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறதா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

ஒவ்வொருவரும் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்று அறிந்துகொள்வது, நீங்கள் மற்றவர்களைப் பார்க்கும் விதத்தையும், அவர்களை நடத்தும் விதத்தையும் எவ்வாறு மாற்றுகிறது?

நீங்கள் யாரிடத்திலாவது அன்புகூருவதைக் கடினமாகக் கருதுகிறீர்களா? அவர்களும் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து கொண்டதன் வாயிலாக அவர்களை எவ்வாறு நேசிக்கப் போகிறீர்கள்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வானவில்

ஆதியாகம் 9:11-17

ஆவிக்குரிய சத்தியங்கள்

இனிமேல் ஜலத்தினால் அழிவில்லை


“இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், ... உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்” (வ. 11). **ஜலப்பிரளயத்தால் உலகளாவிய நியாயத்தீர்ப்பு இனிமேல் நடைபெறாது என்று தேவன் அறிவித்தார்.**

மனுஷனுடைய அக்கிரமத்தால் பூமி அழிக்கப்பட்டாலும் (ஆதியாகமம் 6), இந்த உடன்படிக்கை தேவனுடைய இரக்கத்தையும், அவருடைய கட்டுப்பாட்டையும் நமக்கு உறுதியளிக்கிறது.

எதிர்காலத்தில் நிகழவிருக்கிற நியாயத்தீர்ப்பு தண்ணீரால் அல்ல, **நெருப்பால் வரப்போகிறது** என்பதை 2 பேதுரு 3:7 உறுதிப்படுத்துகிறது.

வானவில் ஓர் உடன்படிக்கையின் அடையாளம்

வானவில் என்பது ஓர் இயற்கையான நிகழ்வு மட்டுமல்ல, அது தேவன் தெரிந்தெடுத்த சின்னம். அது எல்லா தலைமுறைகளுக்கும் எல்லா உயிரினங்களுக்கும் அவர் அளித்த உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கிறது.



புனிதச் சடங்குகளைப் போலவே (ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தியைப் போலவே) வானவில்லும் தேவனுடைய வார்த்தையுடன் இணைந்த, ஆவிக்குரிய அர்த்தமுள்ள காணக்கூடிய ஓர் அடையாளமாகும். இது **நியாயத்தீர்ப்பின் மத்தியிலும் தேவனுடைய கிருபையைக்** குறிக்கிறது.

> “வானவில் தேவன் தமக்குத்தாமே நினைவூட்டிக்கொள்கிற ஒன்றாக இருக்கிறது. மேலும் இரக்கம் நியாயத்தீர்ப்பைக் காட்டிலும் வலியது என்னும் நம்பிக்கையளிக்கும் உறுதிமொழியாகவும் நமக்கு இருக்கிறது.”

தேவன் அந்த அடையாளத்தை நோக்குகிறார்

“அந்த (வான)வில் மேகத்தில் தோன்றும்போது, ... நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப்பார்ப்பேன்.” (ஆதியாகமம். 9:16).

“நீங்கள் அதைப் பார்ப்பீர்கள்” என்று சொல்லவில்லை; மாறாக, “நான் அதை நோக்கிப்பார்ப்பேன்” என்றே தேவன் கூறினார். இந்த உடன்படிக்கை மனிதனின் நினைகூருதலைச் சார்ந்தது அல்ல, அது **தேவனுடைய உண்மைத் தன்மையை** அடிப்படையாகக் கொண்டது.

ஒவ்வொரு முறை வானவில் வானத்தில் தோன்றும் போதும், அது தேவனுக்கு நினைவூட்டுகிற ஒன்றாகவும், **அவர் தம்முடைய வாக்குத்தத்தை நிறை வேற்றுகிறவர்** என்ற முறையில் நம்மை உற்சாகப்படுத்துகிறதாக இருக்கிறது.

நோவாவின் பலிபீடத்துக்கான அடையாளம்

நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, **பலியிட்டதற்கான அவருடைய பதிலாகவே வானவில்** இருக்கிறது (ஆதி. 8:20).

நோவா தேவனுக்குப் பலியிட்டு வழிபட்டதுபோது அவர் சமாதானத்தின் அடையாளத்துடன் அவனுக்குப் **பதிலளித்தார்**. கிருபையைத் தொடர்ந்து **கீழ்ப்படிதலும் ஆராதனையும்** வரும் என்பதற்கு இது ஒரு **நினைவூட்டுதலாகும்.**

முக்கியமான சத்தியங்கள்

அடையாளம் + வார்த்தை = உத்தரவாதம் (உறுதி)

புனிதச் சடங்குகளைப் போலவே (பஸ்கா, ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவற்றைப் போலவே), வானவில்லும் **தேவனுடைய வார்த்தை யுடன் நாம் இணைந்திருக்கும்போதே அர்த்தமுள்ளதாக** இருக்கிறது.

விசுவாசமானது அடையாளத்தைச் சார்ந்திராமல், அடையாளத்தின் மூலமாக வாக்குறுதியளித்த தேவனையே சார்ந்திருக்கிறது என்பதை இது நமக்குக் கற்பிக்கிறது.

> “தேவனுடைய கிருபையின் கண்ணும் நமது விசுவாசத்தின் கண்ணும் புனிதச் சடங்குகளில் ஒன்றையொன்று சந்திக்கின்றன.”
>
> – ஜோஹன் பீட்டர் லாங்கே

சிந்தித்தல்

கேள்வி 1

நீங்கள் ஒரு வானவில்லைப் பார்க்கும்போது, தேவனுடைய இரக்கத்தை நினைவிற்கொள்கிறீர்களா அல்லது அவருடைய வாக்குறுதிகளை நீங்கள் எளிதாக எடுத்துக்கொள்கிறீர்களா?

கேள்வி 2

நோவா கர்த்தரைத் தொழுதுகொண்ட வழிமுறையைப் பின்பற்றி, இன்றைய நாட்களில் நீங்களும் உங்கள் வாழ்க்கையை எவ்வாறு அவருக்குத் திருப்பிச் செலுத்தப்போகிறீர்கள்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்கிறீர்களா? ஒவ்வொரு நாள் காலையிலும் சூரிய உதயத்தைக் காண்கிறதுபோல, நாள் தோறும் தேவனுடைய உண்மையுள்ள உடன்படிக்கையைக் காண்கிறீர்களா?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

நோவாவின் பாவமும் அவனுடைய குமாரரும்

ஆதியாகமம் 9:18-29

ஆவிக்குரிய சத்தியங்கள்



நீதிமான்களும் விழுந்துபோக முடியும்

நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான். அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான் (வ. 20,21).

தேவனோடு நடந்த விசுவாசமுள்ள மனிதனாகிய நோவா, ஜலப்பிரளயத்திலிருந்து தப்பிப்பிழைத்தபின் பாவத்தில் விழுந்துபோனார். **பாவத்தினிமித்தம் உண்டான ஜலப்பிரளயம் என்னும் நியாயத்தீர்ப்பு பாவத்தை அடியோடு அழித்துவிடவில்லை**; மாறாக அது மனுக்குலத்தின் இதயத்தில் நிலைத்திருக்கிறது.

மனித சுபாவம் நியாயத்தீர்ப்பு என்னும் வெள்ளத்தால் சுத்திகரிக்கப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இரட்சிப்பு தண்டனையின் மூலமாக அல்ல, கிருபையால் வர வேண்டும்.

நோவாவின் பாவத்தை வேதாகமம் ஏன் பதிவு செய்துவைத்திருக்கிறது?

தேவனுடைய வார்த்தை, "சிறந்த விசுவாச வீரர்கள்கூட பாவத்தில் விழுந்துவிட முடியும்" என்கிற மனித பலவீனத்தைப் பற்றிய உண்மையைச் சொல்கிறது. "முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4).



பெரிய ஆவிக்குரிய வெற்றிக்குப் பின்னரும் நோவா பாவத்தில் விழுந்தது போல, மாம்சத்தில் நடந்தால் நாமும் பாவத்தில் விழுந்துவிட வாய்ப்பிருக்கிறது. மிகப் பெரிய ஆவிக்குரிய வெற்றிகள்கூட எதிர்கால உண்மைத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்காது என்பதற்கான எச்சரிக்கையாக இது உள்ளது. இதைக் குறித்து, "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத்தேயு 26:41) என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார்.

"நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவ தில்லையே" (கலாத்தியர் 2:16) என்ற சத்தியத்தை இது வலுப்படுத்துகிறது. நோவாவின் கதையானது "தோல்வியை வெல்லும் கிருபை"க்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது.

நோவா தன் இரட்சிப்பை இழந்துபோகவில்லை

நோவாவின் பாவம் தேவனுடைய கிருபைக்கு அவனைத் தகுதியற்றவனாக ஆக்கிவிடவில்லை. அவன் பாவம் செய்தாலும் அவன் இன்னும் விசுவாசமுள்ள மனிதனாகவே விளங்கினான் (எபிரெயர் 11:7). இரட்சிப்பு மனிதனின் குறைபாடற்ற செயல்திறனை அடிப்படையாகக் கொண்டது அல்ல, மாறாக அது தேவனின் மாறாத கிருபையை அடிப்படையாகக் கொண்டது.

ஒருவன் பாவத்தின் விளைவுகளை எதிர்கொள்ளும்போது அவன் இரட்சிப்பையும் இழந்துவிட்டான் என்று நினைத்து குழப்பிக்கொள்ளக்கூடாது. நோவா பாவத்தின் விளைவாகிய அவமானத்தை எதிர்கொண்டார், ஆயினும் அவன் இன்னமும் தேவனின் உடன்படிக்கையிலேயே நிலைத்திருந்தான்.

வெளிப்படுத்திக் காண்பித்தல் அல்ல, மூடுதலே அவசியம்

"அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான். அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்" (வச.22-23).

காம் நோவாவை அவமதித்தான், ஒருவேளை அவன் நோவாவை கேலி செய்திருக் கலாம். இதற்கு நேர்மாறாக, சேமும் யாப்பேத்தும் தங்கள் தந்தையை நிர்வாணத்தை மறைத்ததன் மூலமாக அவனுடைய கண்ணியத்தைப் பாதுகாத்தனர். இது நமக்கு ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறது: **மற்றவர்களின் தோல்விகளை நாம் எவ்வாறு எடுத்துக்கொள்கிறோம் என்பதிலிருந்தே நமது சொந்த இதயங்களின் நிலையும் வெளிப்படுகிறது. "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று பேதுரு நமக்கு நினைவூட்டுகிறார் (1 பேதுரு 4:8). ஆனால் ஏளனம் செய்வதன் மூலமாக அதை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறோம்.**

முக்கியமான சத்தியங்கள்

கனப்படுத்துவதைத் தெரிந்துகொள்ளுங்கள்: தவறுகளை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சியடையும் இந்த உலகத்தில் நீங்கள் சேமும் யாப்பேத்தும் செய்ததைப் போன்று வேதாகமம் போதிக்கும் அன்பை வெளிப்படுத்திக் காட்டுங்கள். ஒருவருடைய தோல்வியை ஏளனம் செய்து வெளிப்படுத்திக் காட்டுவதைக் காட்டிலும், அவரைப் பாதுகாத்து மீட்டெடுப்பதிலேயே கவனம் செலுத்துங்கள்.

பாவம் ஒரு புதிய தொடக்கத்துடன் முடிவடைகிறதில்லை: இந்தப் பகுதி ஆதாமின் வீழ்ச்சியை நமக்கு நினைவூட்டுகிறது. ஜலப்பிரளயத்தின் தீர்ப்புக்குப் பிறகும், மனிதகுலத்தின் பாவசுபாவம் அப்படியே இருக்கிறது. ஒரு புதிய தொடக்கமும் இதயத்தின் நிலையைச் சரிசெய்துவிடாது.

உங்கள் சந்ததியைக் காத்துக்கொள்ளுங்கள்: நீங்கள் அலட்சியமாய் எண்ணும் பாவங்கள் அல்லது தொடர்ந்து செய்யும் பாவங்கள் **உங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்தைப்** பாதிக்கக்கூடும். அவமானத்தைக் கொண்டுவரும் காரியங்களைச் சீக்கிரமே முடிவுக்குக் கொண்டுவாருங்கள்.

சேம், யாப்பேத், கானான் ஆகியோருக்கான தீர்க்கதரிசனங்கள்:

“சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக” (வ. 26). சேமின் வம்சத்திலிருந்து **ஆபிரகாமும், இஸ்ரவேலரும் இறுதியாக கிறிஸ்துவும்** தோன்றுவார்கள் என்பதை இது அறிவிக்கிறது.

“யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்” (வ. 27). இது சேமின் ஆசீர்வாதங்களில் **புறஜாதி தேசங்களும்** பங்குகொள்ளும் என்பதைப் பற்றிய ஒரு சித்திரத்தைத் தருகிறது. இது புறஜாதிகள் உட்பட அனைத்து மக்களையும் சுவிசேஷம் சென்றடைவதை முன்னறிவிப்பதாக இருக்கலாம்.

“கானான் அவனுக்கு (சேமுக்கு) அடிமையாயிருப்பான்” (வ. 26, 27). இது சேமின் வம்சத்தாரிடம் கானானின் வம்சத்தார் தோல்வியடைவார்கள் என்பதன் முன்னறிவிப்பாக இருக்கலாம். குறிப்பாக **யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் கானான் தேசத்தைக்** கைப்பற்றியதை முன்னறிவிக்கிறது.

இந்த ஆசீர்வாதங்களும் சாபங்களும் நோவாவின் உடன்படிக்கையின் ஒரு பகுதியாகவே இருந்தன. அவை வேதாகமத்தின் வரலாற்றை, குறிப்பாக சுற்றியுள்ள நாடுகளுடனான இஸ்ரவேல் நாட்டின் உறவை வடிவமைத்தன.

சுவாரஸ்யமான உண்மை:

ஜலப்பிரளயத்துக்குப் பின்னர் நோவா 350 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் 950 வயது வரை உயிரோடு இருந்தார் [வ. 28,29].





> “புதிய உலகம் என்பது புதிய இருதயத்தைக் குறிக்காது. நியாயத்தீர்ப்பு செய்ய முடியாததை கிருபை மட்டுமே செய்ய முடியும்.”

“காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான். அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்” (வ. 22,23).

சிந்தித்தல்

கேள்வி 1

வெற்றியையும் ஆசீர்வாதங்களையும் அனுபவித்த பிறகும், ஆவிக்குரிய மெத்தனத்தினால் வருகிற ஆபத்தைக் குறித்து நோவாவின் வீழ்ச்சி நமக்கு கற்றுத் தருவது என்ன?

கேள்வி 2

இந்தப் பகுதி மனித இதயத்தின் உண்மையான நிலையையும், எப்போதும் கிருபை அவசியமாயிருக்கிறது என்பதையும் எவ்வாறு வெளிப்படுத்துகிறது? தேவனின் அன்பு நான் சரியாக நடந்துகொள்வதைச் சாந்திருக்கிறது என்று கருதி, கிருபையை நான் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறேனா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

என் குடும்பத்திலோ அல்லது சபையிலோ யாராவது பாவத்தால் வீழ்ச்சியைச் சந்திக்கும்போது அவர்களை நான் எவ்வாறு நடத்துகிறேன்? அன்போடும் கனிவோடும் அவர்களுடைய பாவங்களை மூடி, அவர்களை மீண்டும் புதுப்பிக்கிற தேவனுடைய வழிகளைப் பற்றி சிந்தியுங்கள், தேவன் நம்மை (பாவங்களை) வெளிப்படுத்த அல்ல, அவர்களைக் கனம் செய்யும்படியே அழைக்கிறார் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வீட்டில் செய்ய வேண்டிய காரியங்கள்

தேவனுடைய அறிவாற்றலை உங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துதல்

நாக்டர் மெக்கீயின் மேற்கோள்:



“ வேதாகமம், விசுவாச வீரர்களை கண் மூடித்தனமாக புகழ்ந்துபேசுவதில்லை. அது அவர்களுடைய குறைபாடுகளையும் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. நாமும் கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் காண்பிக்கிறது. ”


தேசங்கள்
ஆதியாகமம் 10 - 11:9

தேசங்கள்

அன்புள்ள பரலோகப் பிதாவே,

“மனுஷஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினீர்” (அப்போஸ்தலர் 17:26) என்று உம்முடைய வார்த்தை அறிவிக்கிறது போல, வரலாற்றில் செயல்பட்ட உம்முடைய இறையாண்மையின் கரங்களுக்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். உம்மைப் போலவே நாங்களும் எல்லாத் தேசங்களையும் நேசிக்கவும், நீர் ஏற்படுத்தியிருக்கிற திட்டத்தில் மனத்தாழ்மையுடன் நடக்கவும், ஒவ்வொரு மக்கள் கூட்டத்தாரிடையேயும் உமது நாமத்தின் மகிமைக்காக வாழவும் எங்களுக்கு உதவி செய்யும்.

இயேசுவின் நாமத்தில், ஆமென்.

ஒரு குடும்பத்திலிருந்து பல தேசங்கள்

ஆதியாகமம் 10:1-20



ஒவ்வொரு தேசத்திற்கும் கலாச்சாரத்திற்கும் பின்னால் ஒரு குடும்பக் கிளைவழி உள்ளது, அவை அனைத்திற்கும் தேவனே ஆணிவேராயிருக்கிறார்.

டாக்டர் வெர்னோன் மெக்கீ

இன்றியமையா உண்மைகள்

ஆதியாகமம் 10-ஆம் அதிகாரம் **வெறுமனே பெயர்களின் பட்டியல் மட்டுமல்ல**. இது **வேதாகம “தேசங்களின் வரைபடம்”**. இந்த அத்தியாயம் பூமியிலுள்ள **ஒவ்வொரு பெரிய இனக்குழுவின்** வேர்களையும் கோடிட்டுக் காட்டுகிறது, இவை அனைத்தும் வெள்ளத்திற்குப் பிறகு **நோவாவின் மூன்று குமாரர்களின்** மூலமாக வந்தவை ஆகும்.

நோவாவின் மூன்று குமாரர்



யாப்பேத் காம் சேம்

இந்த மூன்று வம்சாவழி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில்,

இது உலகிலுள்ள அனைத்து இனப் பிரிவுகளுக்கும் அடித்தளமாக அமைகிறது.

குடும்பங்கள் மற்றும் தேசங்களின் வாயிலாக **மனித வரலாற்றில் தேவனுடைய பங்கேற்பை** இது காட்டுகிறது

இது **மேசியாவின் வம்சாவளியை நோக்கிச் செல்கிறது**. மேலும் சேமின் சந்ததியினர் வாயிலாக தேவனின் மீட்புத் திட்டத்திற்கான களத்தை அமைக்கிறது.

The New Begin

ஆவிக்குரிய சத்தியங்கள்

குடும்பங்களின் மூலம் தேவன் செயல்படுகிறார்

“நோவாவின் குமாரராகிய சேம் காம் யாப்பேத் என்பவர்களின் வம்சவரலாறு...” (வ.1)

தொடக்கம் முதலே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வாழையடி வாழையாக சத்தியத்தையும் ஆசீர்வாதத்தையும் கடத்துகிற **தலைமுறைகளையே தேவன் தம்முடைய திட்டங்களை நிறைவேற்றும்படி** தெரிந்தெடுத்துள்ளார்.

ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு பொதுவான பூர்வீகக் குடும்பம் உள்ளது

ஆதியாகமம் 10 உலக நாடுகள் அனைத்தும் ஒரே குடும்பத்திலிருந்து வந்தவையே என்பதைக் காட்டுக்கிறது. இது ஒரு இனம் மற்றொன்றைக் காட்டிலும் மேலானது என்ற தவறான எண்ணத்தையும், இனப் பிரிவினைவாதத்தையும் தகர்த்துப் போடுகிறது.

மனுஷஜாதியான சகல ஜனங்களும் ஒரே இரத்தத்திலிருந்து தோன்றியவையே (அப். 17:26). சகல மக்களும் ஆதாமிலிருந்தும், அவனுக்குப்பின் நோவாவிலிருந்தும் வந்தவர்களே.

வேதாகமத்தின் முறைமை: புறக்கணிக்கப்படும் இனம் முதலில் சொல்லப்படுதல்

நிராகரிக்கப்படுகிற இனத்தை தேவன் முதலாவது குறிப்பிடுகிறார். அதாவது **கிறிஸ்து பிறக்கப்போகிற** தெரிந்துகொள்ளப்பட்ட சேமின் வம்சாவழியைக் குறிப்பிடுவதற்கு முன்னரே, நிராகரிக்கப்பட்ட இனங்களாகிய யாப்பேத்தையும் காமையும் தேவன் குறிப்பிடுகிறார் என்பதை டாக்டர் மெக்கீ சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு குறிப்பிடும் முறையானது, தேவன் மனுக்குலத்தின் மீறுதல்களை மறைக்கவில்லை என்பதையும், அதேவேளையில் அவர் தம்முடைய மீட்பைக் கொண்டுரப்போகிற இனத்தின் சிறப்புக்கூறுகளை எடுத்துக்காட்டுகிறார் என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.

> “வேதாகமம் முழுவதிலும் இந்த முறையை தேவன் பயன் படுத்தியிருப்பதைக் காணமுடியும். தேவன் நிராகரிக்கப்பட்ட இனத்தைப் பற்றி முதலாவதாக ஓரிரு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, பின்னர் அதைப் பற்றி மீண்டும் எதுவும் பேசாமல் முற்றிலும் விலக்கிவிடுகிறார். அதற்குப் பிறகு இறுதியாக, அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு வழிவகுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட வம்சாவளியைப் பற்றி முக்கியத்துவம் கொடுத்து விவரிக்கிறார்.”



சிந்தித்தல்

கேள்வி 1

நான் எனது விசுவாசத்தையும் பாரம்பரியத்தையும் அடுத்த தலைமுறைக்கு மனப்பூர்வமான நோக்கத்துடன் கடத்துகிறேனா?

கேள்வி 2

நான் பிறந்த, சாதி, இனம், நிறம் போன்றவற்றின் அடிப்படையில் பிறரைக் காட்டிலும் என்னை உயர்ந்தவனோ என்றோ அல்லது தாழ்ந்தவனோ என்றோ எப்போதாவது எண்ணியிருக்கிறேனா?

செயல்படுத்துதல்

கேள்வி 3

“உன்னைப் போல பிறனையும் நேசி” என்று தேவன் நமக்குக் கட்டளையிட்ட படி, தேசங்களுக்காகவும் இனக் குழுக்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:


மக்கள் பரவிச் செல்லுதல்

ஆதியாகமம் 10:2-7

ஆவிக்குரிய சத்தியங்கள்

யாப்பேத்தின் குமாரர் - ஐரோப்பாவிலும் மத்திய ஆசியாவிலும் குடியேறியவர்கள்

“யாப்பேத்தின் குமாரர், கோமர், மாகோகு, மாதாய், யாவான், தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள்” (ஆதி. 10:2).




யாப்பேத்
வம்சத்திலிருந்து
தோன்றிய தேசங்கள்

“ஒவ்வொரு தேசத்திற்கும் பின்னால் ஒரு குடும்பம் இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் பின்னால் ஒரு வாக்குறுதியோ அல்லது ஒரு கீழ்ப்படியாமையின் மீறுதலோ இருக்கிறது.”

காமின் குமாரர் - ஆப்பிரிக்காவிலும் மத்திய கிழக்கு பகுதியிலும் குடியேறியவர்கள்

“காமுடைய குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத், கானான் என்பவர்கள்” (வ. 6).



கானான்
வம்சத்திலிருந்து
தோன்றிய தேசங்கள்

“கானான் மீதே சாபம் வந்ததே தவிர, காம் மீதோ அல்லது ஆப்பிரிக்க மக்கள் மீதோ அல்ல. இன ரீதியான பாகுபாட்டை நியாயப்படுத்துவதற்காக வேதாகமத்தை தவறாகப் பயன்படுத்திய, தவறான போதனைகளைச் சரிசெய்ய இது மிகவும் முக்கியமானது.”

சிந்தித்தல்

கேள்வி 1

தேவனுடைய படைப்பின் கலாச்சார பன்முகத்தன்மையைக் கொண்டாடுவதன், மூலம் அனைவருக்குமான தேவனின் மீட்பின் திட்டத்தை நான் எவ்வாறு கனப்படுத்த முடியும்?

கேள்வி 2

நாம் அனைவருமே ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைவில் கொள்வதன் வாயிலாக, நான் பிறரை நடத்தும் விதத்தில் எவ்வாறு மாற்றத்தைக் காண்பிக்க முடியும்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் பிறரிடத்தில் பாரபட்சம் காட்டுவதை நாம் எதிர்க்க வேண்டும். இதை நம்முடைய சமுதாயத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான நடைமுறை வழிகள் யாவை?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

முதல் பேரரசனும் பலத்த வேட்டைக்காரனும்

ஆதியாகமம் 10:8-12

இன்றியமையா உண்மைகள்



நிம்ரோத் - முதல் பேரரசைத் தோற்றுவித்தவன்

“**கூஷ் நிம்ரோதைப் பெற்றான்; இவன் பூமியிலே பராக்கிரமசாலியானான்**” (வ. 8).

நிம்ரோத் ஒரு பராக்கிரமசாலியான மனிதன் மட்டுமல்ல, ஜலப்பிரளயத்துக்குப் பிறகு ஒரு ஒருங்கிணைந்த சாம்ராஜ்யத்தை உருவாக்க முயற்சித்த **முதல் அரசியல் தலைவனும்** ஆவான்.

“பராக்கிரமசாலி” என்ற வார்த்தையானது **ஆளுகை, கட்டுப்பாடு** மற்றும் **அடக்குமுறை** ஆகியவற்றைக் குறிக்கிறது.

இது **தேவனுடைய ஆளுகையை மீறிய மனித அரசாங்கத்தின்** தொடக்கத்தைக் குறிக்கிறது.

விலங்குகளை அல்ல, மனித ஆத்துமாக்களை வேட்டையாடுகிறவன்

“**இவன் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்**” (வ. 9).

“பலத்த வேட்டைக்காரன்” என்பதற்கு விலங்குகளை வேட்டையாடுகிறன் என்று பொருளல்ல. மாறாக, **மனிதர்களை வேட்டையாடுகிறவன்** என்பதைக் குறிக்கும் உருவகச் சொல். அதாவது தனது சொந்த நோக்கங்களுக்காக மக்களைக் கூட்டிச் சேர்த்து அவர்களை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறவன்.

“கர்த்தருக்கு முன்பாக” என்பதற்கு வேனுடைய **அதிகாரத்தை துணிச்சலாக எதிர்ப்பவன்** அல்லது தேவனுக்குச் **சவால்விடுகிறவன்** என்று அர்த்தம்.

தேவனுக்கு எதிர்த்து நின்று, மக்களை வஞ்சிக்கிற எதிர்காலத்தில் வரப்போகிற உலகளாவிய தலைவனான **அந்திக் கிறிஸ்துவுக்கு** நிம்ரோத் ஒரு முன்னடையாளமாக விளங்குகிறான்.

கலகக்காரர்களின் நகரங்கள்

“சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதி ஸ்தானங்கள்” (வ. 10).

நிம்ரோத்தின் ராஜ்யம் **பாபேலில்** தொடங்கியது, அது பின்னர் பாபிலோனாக மாறியது. இது **கிளர்ச்சி, குழப்பம், பொய்யான மதம்** ஆகியவற்றுக்கு அடையாளமாகியது.

தேவனுடைய துணையில்லாமல் மனித பலத்தால் கட்டி உண்டாக்கப்படும் நகரமயமாக்கும் முயற்சியை இது பிரதிபலிக்கிறது. இந்தச் சிந்தனை அடுத்த அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள பாபேல் கோபுரம் கட்டுவதில் எதிரொலிக்கிறது.

> “நிம்ரோத் என்பவன் கலகக்காரன், பாபேலை நிறுவியவன், மனித ஆத்துமாக்களை வேட்டையாடுகிறவன். அவன் சட்டத்தை மதிக்காத அக்கிரமக்காரன். அவன் வரப்போகிற கடைசி உலக ஆட்சியாளனாகிய அந்திக் கிறிஸ்துவின் நிழலாக அல்லது சித்திரமாக இருக்கிறான்.”



சிந்தித்தல்

கேள்வி 1

உலகத் தலைமைத்துவத்தின் நவீன வடிவங்களை நிம்ரோத் எந்த வழிகளில் பிரதிபலிக்கிறான்?

கேள்வி 2

நமது சொந்த "ராஜ்யங்களைக்" கட்டும்போது, பாபேலின் அடிப்படையிலிருந்து நாம் என்ன எச்சரிக்கைகளைப் பெற்றுக்கொள்கிறோம்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

உங்கள் வாழ்க்கையை பாபேலின் லட்சியத்தின் மீது அல்ல, மாறாக மூலைக் கல்லாகிய கிறிஸ்துவின் மீது கட்டியெழுப்புங்கள். கிறிஸ்துவின் மீது உங்கள் வாழ்க்கையை எவ்வாறு கட்டியெழுப்புவீர்கள் என்பதை எழுதுங்கள். பாபேலின் லட்சியத்தைப் பின்பற்றாமல் இருப்பதற்காக எவற்றையெல்லாம் தவிர்ப்பீர்கள்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வாக்குறுதி மற்றும் மீட்பின் சந்ததி

ஆதியாகமம் 10:21-32

இன்றியமையா உண்மைகள்

சேம் - செமித்திய இனங்களின் தந்தை


“சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவன் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனாய் இருந்தான்” (வ. 21).

சேம், **எபிரெயர்களின் முதாதையாராகிய ஏபேருடைய** சந்ததியாருக்குத் தகப்பனாய் இருந்தான்.

ஆபிரகாம், இஸ்ரவேல் மற்றும் இறுதியாக கிறிஸ்துவின் வழியாக **மீட்பைக்** கொண்டுவர தேவன் பயன்படுத்திய **தெரிந்தெடுக்கப்பட்ட வம்சாவளியை** சேம் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

சேம் வெற்றியின் மூலம் ஆளுகை செலுத்துவதற்குப் பதிலாக ஆவிக்குரிய ஆசீர்வாதத்துடன் இணைக்கப்பட்டவராயிருக்கிறார்.

சேம் வம்சத்திலிருந்து தோன்றிய தேசங்கள்



இந்தக் குழுக்கள் பண்டைய வரலாற்றில், குறிப்பாக **மத்திய கிழக்குப் பகுதியில்** முக்கிய பங்கு வகித்தன.

அரேபியப் பழங்குடியினரும் யோக்தானின் வழிவந்த பழங்குடியினரும், **தெற்கு பாலைவனப் பகுதிகளில்** குடியேறி அங்கு வாழ்ந்து வந்தனர்.

வேதாகம காலத்திலும் வேதாகமத்திற்குப் பிந்தைய தொடக்க காலத்திலும் **சீரியர்களும் அர்மீனியர்களும்** முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர்.

ஆவிக்குரிய சத்தியங்கள்


தேசங்களை எழுப்பி அவற்றைத் தம்முடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறதன் வாயிலாக, **மனித வரலாற்றில்** தேவனுடைய இறையாண்மையின் கரம் தெளிவாகத் தெரிகிறது.

> “உலக தேசங்களுடன் அவர் என்ன செய்தார் என்பதை தேவன் நமக்குக் காட்டுகிறார்.”

தாவீது மற்றும் சாலொமோனின் காலத்தில், இஸ்ரேல் தேசம் பூமியில் தேவனுடைய ஆட்சியின் கலங்கரை விளக்கமாக மாறியபோது **சேமின் வம்சாவளி** முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

இந்த அத்தியாயம் **மனிதகுலத்தின் ஒற்றுமையையும் நாடுகளின் பன்முகத் தன்மையையும்** காட்டுகிறது, இது அனைத்து மக்களையும் சுவிசேஷம் சென்றடைய உகந்த சூழலை அமைத்துக் கொடுக்கிறது (அப்போஸ்தலர் 17:26-27).

ஆதியாகம் 10-இல் சொல்லப்பட்டுள்ள தேசங்கள்



மொத்தம் 70 தேசங்கள். இவர்களே அனைத்து மனுக்குலத்தின் பிரதிநிதிகள்

சிந்தித்தல்

கேள்வி 1

சேமின் வழித்தோன்றல்கள் எவ்வாறு தேவனுடைய மீட்பின் திட்டத்தை நமக்கு நினைவூட்டுகிறார்கள்?

கேள்வி 2

இஸ்ரவேல் மக்கள் மீது மட்டுமல்ல, எல்லா ஜனங்கள் மீதும் தேவன் கொண்டுள்ள அக்கறையைப் பற்றி இந்த அதிகாரம் நமக்கு என்ன போதிக்கிறது?

செயல்படுத்துதல்

கேள்வி 3

சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் உலகளாவிய அருட்பணியில் நீங்களும் ஒரு பங்காக இருக்கிறீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? விசுவாசிகளுடன் ஒருமனப்பாட்டுடன் இருக்கும்படியான இதயத்தையும் விருப்பத்தையும் வளர்க்கவும், உலகெங்கிலுமுள்ள எல்லா மொழியினருக்கும், இனத்தாருக்கும், தேசத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும் தேவனிடம் உதவி கேளுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

பாபேல் கோபுரம்

ஆதியாகமம் 11:1-4

ஆவிக்குரிய சத்தியங்கள்

ஒரே மொழி - ஒரு பேச்சு

“பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது” (வச.1).

மனிதர் அனைவரும் **ஒரே மொழியைப்** பேசினர். இது ஜலப்பிரளயத்துக்குப் பிறகு இருந்த ஒரே பூர்வீகத்தையும் ஒற்றுமையையும் பிரதிபலிக்கிறது. இது பாபேலுக்கு முன் இருந்த ஒற்றுமை.

சத்தியம்: தேவனுடைய வழிகாட்டுதல் இல்லாத ஒற்றுமை கிளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. ஒரே மொழி என்பது ஒரு சிலாக்கியமாக இருந்தாலும் சுயநல லட்சியத்திற்காக அது தவறாகப் பயன்படுத்தப்படலாம்.

சிநேயார் தேசத்தில் குடியேறுதல் - தேவன் சொன்னதை நிறுத்துதல்

“ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள்” (வ. 2).



தேவன் கட்டளையிட்டபடி பரவிச் செல்வதற்குப் பதிலாக மனிதர் **சிநேயார் தேசத்தில் (பாபிலோன் பகுதியில்)** குடியேறினர்.

“பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” என்ற தேவனின் கட்டளையை மீறி, **ஒரே இடத்தில் ஒன்றாக இருக்க வேண்டும் என்னும் விருப்பத்தை** இந்த இயக்கம் காட்டுகிறது (ஆதி. 9:1).

சத்தியம்: கீழ்ப்படியாமை பெரும்பாலும் சின்னச் சின்ன தெரிந்தெடுப்புகளிலிருந்தே தொடங்குகிறது.

செங்கல்கள் கொண்டு கட்டுதல் - மனித முயற்சி

“நாம் செங்கல் அறுத்து ... ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்” (வ. 3-4).

அவர்கள் **கல்லுக்குப் பதிலாக செங்கலையும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலையும்** பயன்படுத்தினர். இது மனிதனின் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கு அடையாளமாயிருக்கிறது. அவர்கள் வானத்தை அடையும்படியான ஒரு **நகரத்தையும் கோபுரத்தையும்** உருவாக்க முயன்றனர். இது எழுத்துப்பூர்வமாக அல்ல, அடையாளச் சின்னமாக உருவாக்க முயன்றதைக் குறிக்கிறது.

“**நமக்குப் பேர் உண்டாகப்பண்ணும்படி**” என்பது பெருமை மற்றும் சுய மகிமையின் வெளிப்பாடாகும்.

சத்தியம்: பெருமையினாலும் சுயமகிமையினாலும் மனித முயற்சி இயக்கப்படும்போது, அது முடிவில் கலகத்தின் நினைவுச்சின்னங்களை உருவாக்குகிறது.

கலகத்துக்கும் மத அடையாளத்துக்கும் அடையாளமாயிருக்கிற பாபேல் கோபுரம்

பாபேல் கோபுரம் கட்டடக்கலையை விட அதிகமான அர்த்தமுடையது. அது:



தேவனை மீறிய மனிதர்களின் **அணிவகுப்பு நடத்தப்பட்ட இடம்**



தேவன் இல்லாமல் நம்மை நாமே ஆளுகை செய்ய வேண்டும் என்ற **மனித லட்சியத்தின் சின்னம்**



சிருஷ்டிகருக்குப் பதிலாக உண்டாக்கப்பட்ட **மத அடையாளத்தின் பிரமிடு** (ரோமர் 1:25)

சத்தியம்: விக்கிரக வழிபாடு பெரும்பாலும் வெவ்வேறு வடிவங்களில் மாறிக்கொண்டேயிருக்கிறது. பாபேல் கோபுரம் மனிதனை மையமாகக் கொண்ட மதத்தையும், தேவன் இல்லாமல் ஏற்படுத்துகிற உலக ஒற்றுமையையும் குறிக்கிறது.

நிம்ரோத்தின் ஆவி தொடர்ந்து இயங்குகிறது

நிம்ரோதின் லட்சியம் (ஆதி. 10:8-10) இந்தத் திட்டத்தில் மலர்ந்தது.

அவர் ஒரு தலைநகரத்தையும் (பாபேல்) **ஒரு கட்டுப்பாட்டு நினைவுச்சின்னத்தையும் (கோபுரத்தையும்)** கட்ட விரும்பினான்.

இது தங்களது பாதுகாப்புக்காக கட்டப்படவில்லை, மாறாகக் **கலகத்தாலும் சுயஆளுகையை உறுதிப்படுத்தவும்** கட்டப்பட்டது.

சத்தியம்: “நமக்குப் பேர் உண்டாகப்பண்ணும்படி” என்று மனிதன் சொல்லும்போது, தேவன் மட்டுமே நீடித்த வகையில் ஒரு பெயரை உயர்த்தவோ, நிலைநிறுத்தவோ முடியும் என்பதை அவன் மறந்துவிடுகிறான்.

சிந்தித்தல்

கேள்வி 1

“நமக்கென்று ஒரு பெயரை உருவாக்குவது” நம்முடைய இருதயம் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்கிறது என்பதை எந்த வகையில் வெளிப்படுத்துகிறது?

கேள்வி 2

தேவனுக்கு அப்பாற்பட்டு ஏற்படுத்துகிற ஒற்றுமையும், சுயலட்சியத்தை அடைவதன் ஆபத்தைப் பற்றியும் இந்த வேதபகுதி என்ன கற்பிக்கிறது?

கேள்வி 3

நீங்களோ அல்லது உங்கள் திருச்சபையோ நல்லது என்று நினைத்து தேவனுக்கு செயலாக்கத்தில் இல்லாத ஏதாவது ஒன்றைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்களா?

செயல்படுத்துதல்

கேள்வி 4

நீங்கள் எந்தெந்த வழிகளில் உங்களையே மகிமைப்படுத்த முயற்சிக்கிறீர்கள்? அல்லது சுய அங்கீகாரத்தைத் தேடுகிறீர்கள்? உங்க-ளுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக தேவனை மகிமைப்படுத்துவதில் எவ்வாறு தீவிரமாகச் செயல்படுத்த முடியும்?

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

தேவனின் தெய்வீகத் தலையீடும் தேசங்களின் தோற்றமும்

ஆதியாகமம் 11:5-9

ஆவிக்குரிய சத்தியங்கள்

கோபுரம் கட்டுவதன் மெய்யான நோக்கத்தை தேவன் கண்டார்

"மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார்" (வ. 5). கட்டத் தொடங்கும்போதே இதைப் பற்றி தேவனுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. மாறாக தேவன் அதைக் கவனத்தில்கொண்டார் என்பதையும் அதன் மீதான தெய்வீக அக்கறையும் வெளிப்படுத்துகிறது. மேலும் மனுக்குலத்திற்கான தேவனின் நோக்கங்களுக்கு மனிதத் திட்டங்கள் அச்சுறுத்தலாக மாறும்போது **தேவன் தனிப்பட்ட முறையில் அதில் தலையிடுகிறார்**.

சத்தியம்: தேவன் மனிதனுயை சுயலட்சியத்தைக் கண்ணோக்கிப் பார்க்கிறார். கீழ்ப்படிதலுக்கு மாற்றாக பெருமை தலைதூக்கும்போது அவர் அதில் தலையிடுகிறார்.

தேவன் ஏற்படுத்தாத ஒற்றுமை ஆபத்தானது

"இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்... இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்" (வ. 6). ஒற்றுமை என்பது எப்போதும் நல்லதல்ல; ஏனெனில் அதன் நோக்கத்தைப் பொறுத்து அது மாறக்கூடியதாயிருக்கிறது.

மனித ஆற்றல் + ஒரே தொடர்பு மொழி = தேவனால் கட்டுப்படுத்தப்படாத போது கட்டுப்பாடற்ற கிளர்ச்சி.

சத்தியம்: தேவன் நம்முடைய பாதுகாப்பிற்காக வரம்புகளை நிர்ணயிக்கிறார். நம்முடைய ஆத்துமாக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் விஷயங்களை அவர் அன்பான முறையில் கலைத்துப்போடுகிறார்.

தெய்வீக நியாயத்தீர்ப்பு: பாஷைகளில் ஏற்பட்ட குழப்பம்

"நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்" (வ.7).

அவர்களுடைய தவறான ஒற்றுமைக்கு எதிர்மாறான வகையில் **தேவன் அவர்களது பாஷையைத் தாறுமாறாக்கினார்**. ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ள முடியாதபடி உடனடியாக அவர்களது கட்டுமான முயற்சி நிறுத்தப்பட்டது.

சத்தியம்: மனிதனுடைய பெருமைக்குரிய முயற்சிகள் பலவீனமானவை. தேவன் தலையிடும்போது அவை தோல்வியடைகின்றன.

தேசங்கள் சிதறடிக்கப்படுதல்

"அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப் போகப்பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்" (வ. 8).

நகரம் கட்டுவது கைவிடப்பட்டது. அவர்களது திட்டம் தோல்வியடைந்தது. **பாபேல் என்ற பெயருக்கு "குழப்பம்"** என்று பொருள். "**பூமியை நிரப்புங்கள்**" என்ற தேவனின் ஆதிக் கட்டளை சிதறிப்போனதன் வாயிலாக நிறைவேற்றப்பட்டது (ஆதி. 9:1).

சத்தியம்: மனிதன் கலகத்தின் வாயிலாக எதைச் செய்ய முயற்சிக்கிறானோ, அதைத் தேவன் சிதறடித்து தம்முடைய உன்னதமான திட்டத்தை பாதுகாக்கிறார்.

> "இப்போது மனிதன் பூமியின்மீதெங்கும் சிதறிப்போனான். அவர்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்து ஒன்றாக இருக்க முயன்றனர். ஆனால் இப்போது அவர்களால் ஒருவர் பேசுவதை ஒருவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. மொழித் தடை என்பது சீனப் பெருஞ்சுவரைக் காட்டிலும் உயரமான பெருஞ்சுவர் என்பதை நீங்கள் அறிந்திருந்திருக்கிறீர்களா? அது மக்களைப் பிரிக்கிறது, மேலும் அது எந்த நாட்டின் எல்லைகளைக் காட்டிலும், எத்தகைய பெருங்கடல்களைக் காட்டிலும் வலிமையானது."

இன்றியமையா உண்மைகள்

ஒரு நியாயத்தீர்ப்பும் ஓர் ஆசீர்வாதமும்

தேவனின் செயலானது மனிதகுலம் கூட்டாகச் சேர்ந்து கிளர்ச்சி செய்வதைத் தடுக்கிற ஒரு **நியாயத்தீர்ப்பாக** இருந்தது. அதேவேளையில் மனிதகுலத்தை அதன் சொந்த அழிவுக்கேதுவான லட்சியத்திலிருந்து பாதுகாக்கும் ஓர் **ஆசீர்வாதமாகவும்** இருந்தது.

தேவனின் செயலானது அவருடைய **மீட்பின் திட்டத்தைப் பாதுகாப்பதற் காகத்** தவறான ஒற்றுமையைச சீர்குலைத்தது.

பாபேலும் பெந்தெகொஸ்தேயும்

பாபேல்: பாஷைகள் தாறுமாறாக்கப்பட்டன - நாடுகள் சிதறடிக்கப்பட்டன.

பெந்தெகொஸ்தே: பாஷைகள் மீட்கப்பட்டன, அனைவருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. பாபேலில் ஏற்பட்ட குழப்பத்திற்கு அப்போஸ்தலர் 2-ஆம் அதிகாரம் **தேவனுடைய மீட்பின் பதிலாக இருக்கிறது**. அங்கே சிதறடிக்கப் பட்டவர்கள் ஒன்றுகூடியிருந்தபோது அவரவருக்குத் தெரிந்த பாஷைகள் பேசப்பட்டன.

சத்தியம்: பாவம் எதைச் சிதறடித்ததோ கிருபை அதை கூட்டிச் சேர்க்கிறது. சுவிசேஷம் ஒவ்வொரு மொழியையும்,தேசத்தையும் கடந்து செல்கிறது.

சிந்தித்தல்

கேள்வி 1

இந்தப் பகுதி, தேவனுடைய மீட்புத் திட்டத்தில் ஒன்றுபட்ட, உலகளாவிய குடும்பத்தைக் குறித்து அவருடைய இருதயம் எதை வெளிப்படுத்துகிறது?

கேள்வி 2

நீங்கள் எப்போதாவது ஏதாவது ஒன்றைத் திட்டமிட்டு, அது உங்கள் திட்டத்தின்படி நடக்கவில்லை என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? இதுபோன்ற சூழ்நிலைகளை நீங்கள் எவ்வாறு கையாள்கிறீர்கள்?

செயல்படுத்துதல்

கேள்வி 3

வெவ்வேறு தேசங்கள் மற்றும் மொழிகளைச் சேர்ந்த மக்கள் கிறிஸ்துவை அறிய வேண்டுமென்று ஜெபியுங்கள். சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் அருட்பணியில் ஆதரவளிக்கவோ அல்லது ஈடுபடுத்திக் கொள்வதற்கான வழிகளையோ ஆராயுங்கள்.

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை இங்கே எழுதுங்கள்:

வீட்டில் செய்ய வேண்டிய காரியங்கள்

தேவனுடைய அறிவாற்றலை உங்களுடைய வாழ்க்கையில் அப்பியாசப் படுத்துதல்

டாக்டர் மெக்கீயின் மேற்கோள்:



“நீங்கள் யாராக இருந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், சுவிசேஷம் உங்களுக்கானது. ஆம், அது உங்களுக்கானதே. அது உலகிலுள்ள அனைத்து தேசங்களுக்கும் உரியது. வேதாகமத்தின் இறுதிப் புத்தகத்தில், “...இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்...” (வெளி. 7:9) அவருடைய பிரசன்னத்தில் கூடிவருவார்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது.”

THRU the BIBLE

எங்களுடைய வேதாகமம் சார்ந்த வளங்களை
செயலிகளின் வாயிலாக படிப்பதற்கு
கீழ்க்காணும் QR Code Scan செய்யுங்கள்

THRU the BIBLE
செயலி மூலம், 200க்கும் மேற்பட்ட
மொழிகளில் கிடைக்கும்
ஒலி வடிவ வேதாகம போதனைகளைப்
பதிவிறக்கம் செய்து கேட்டுப்
பயனடையுங்கள்.

Visit ttb.bible

எங்கள் வலைத்தளத்தில் “வேதாகம
தோழன் புத்தகத் தொடரில்”, அதிக
தொகுதிகளைக் கொண்ட எங்கள்
வண்ணமயமான மின்னனுப்
புத்தகங்களைக் கண்டு வாசித்துப்
பயனடையுங்கள்.

Visit ttbsa.org